# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 190 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 01ஆம் திகதி புதன்கிழமை
(15.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 22, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு புத்தாடைகள் வழங்கியதால்

**களுத்துறை பிரதேச சபையில் நேற்று பதற்றநிலை**

02 பக்கம்

## உஷ்



மடகஸ்கரில் கைதாகி இன்று இலங்கைக்கு அழைத்துவரப்படும் பாதாள உலக கோஷ்டியின் புள்ளிகள் சிலர் பொலிஸ் உயரதிகாரிகள் பலருடன் தொடர்புகளை வைத்திருந்ததாக தகவல் வெளியாகியுள்ளதால், பாதுகாப்புத்துறையின் முக்கிய அதிகாரிகள் விழிப்புடன் இருக்கின்றனராம்.

ஏற்கனவே பிணையில் விடுதலையாகிய கஞ்சிப்பான இம்ரான் நாட்டிலிருந்து தப்பியோடியுள்ளதால், புதிதாக கைதுசெய்யப்படும் நபர்களும் தப்பியோடலாம். எனவே, அவர்களை பொலிஸ் காவலில் வைக்காமல் வேறு பாதுகாப்பான சிறைக்கூடத்தில் வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

# இலங்கையில் எங்களை கொன்றுவிடாதீர்கள்;

## வரும் வழியில் கதறிய 'ஹரக் கட்டா'



போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பாதாள உலகக் குற்றவாளிகளான ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் மடகஸ்கரிலிருந்து இலங்கைக்கு இன்று அழைத்து வரப்படவுள்ளனர். பின்னர் இவர்களை பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்க மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் காவிந்த பியசேகர ஆகியோருடன் பொலிஸ் மா அதிபர் நேற்றுமுன்தினம் (13) மாலை விசேட கலந்துரையாடலை நடத்தியதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இரு பாதாள உலகக் குற்றவாளிகளையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரைத் தவிர வேறு எந்த புலனாய்வுக் குழுவிடமும் ஒப்படைக்காமல் இருப்பதற்காக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், எந்தவொரு புலனாய்வுக் குழுவும் இந்த இரண்டு குற்றவாளிகளையும் அவர்களின்... 02 பக்கம்

## புகையிரத திணைக்களத்தின் ஊழியர் விடுமுறைகள் இரத்து




அத்தியாவசிய பொது சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள புகையிரத திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் உடன் அமுலுக்குவரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. 02 பக்கம்

# அத்தியாவசிய சேவைகள் இன்று முடங்கும் அபாயம்!



**அரசுடன் நடத்திய பேச்சுகளின் தோல்வியால் தொழிற்சங்கப் போராட்டம் தீவிரமாக முன்னெடுப்பு**

02 பக்கம்

## மைத்ரியின் ரிட் மனுவை விசாரிக்கத் தீர்மானம்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப்பேராணை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

அருட்தந்தை சிறில் காமினி உள்ளிட்ட இருவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பிலான மனுவை செல்லுபடியற்ற தாக்குமாறே குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 02 பக்கம்

## மேல், மத்திய மாகாண பரீட்சைகள் ஒத்திவைப்பு



மேல்மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் ஆண்டு இறுதிப்பரீட்சையில் இன்று 15ஆம் திகதி இடம்பெறவிருக்கும் பரீட்சைகளை எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக மேல்மாகாண கல்விப் பணிப்பாளர் ஸ்ரீலால் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனைத்து வலய மற்றும் வட்டார கல்விப் பணிப்பாளர்களுக்கு... 02 பக்கம்

## பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்தல்

**கல்வியமைச்சு விசேட அறிவிப்பு**



அரச பணியிலுள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைகளுக்கு இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நாடு முழுவதும் 341 நிலையங்களில் இதற்கான பரீட்சை நடத்தப்படும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

## தேர்தல் நடத்தப்படாமை: எதிராக நீதிமன்றில் மனு



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உரிய திகதியில் நடத்தப்படாமையால், அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறுகோரி, உயர் நீதிமன்றில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 02 பக்கம்

## உள்ளூராட்சி சபை வாகனங்கள், சொத்துகளை மீள கையளிக்குக!

**உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர பணிப்பு**



அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ காலம் எதிர்வரும் 19ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அந்த சபைகளின் தலைவர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் பயன்படுத்திய வாகனங்கள் உட்பட அனைத்து அரச சொத்துகளும் அன்றைய தினம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்



## சுதந்திர சதுக்க வளாகத்திற்குள் செல்ல இலங்கையர்களுக்குத் தடை

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...




## உயர்கல்வித்துறை விஸ்தரிப்பு

**பாராளுமன்றக் குழுவில் ஆராய்வு**



இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விஸ்தரிப்பது தொடர்பில் பொருத்தமான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்ற விசேட குழு அதன் தலைவர் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் கடந்த 08, 09 மற்றும் 10ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் கூடியது.

உயர்கல்வித்துறையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அதில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து இதில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

02 பக்கம்

## சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் 800 இ.போ.ச. பஸ்கள் சேவையில்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

02 பக்கம்



## விடைத்தாள் மதிப்பீடு ஒத்துழைப்பு வழங்குக!

**அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல**

•நா.தினுஷா



சாதாரண தரப் பரீட்சை உள்ளிட்ட பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைகளை சீர்குலைக்கும் வகையில் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, நாட்டின் நிலைமையை புரிந்துகொண்டு, உயர் தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகளுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தார். நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (14) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில்... 02 பக்கம்

### பட்டதாரிகளை ஆசிரியர்...

குறித்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பரீட்சைத் திணைக்களம் ஏற்கனவே எடுத்துள்ளது.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மாகாண அடிப்படையில் உருவாகும் வெற்றிடங்களுக்கு மாகாண சபைகள் வருடாந்தம் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

### உள்ளூராட்சி சபை...

இந்த வாகனங்களை வேறு அதிகாரிகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வழங்காமல் தனித்தனியாக வைத்திருக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதாக தெரிவித்த உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர, அந்த வாகனங்களை தவறாக பயன்படுத்தினால் எதிர்காலத்தில் வாகனங்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் விசேட சுற்றறிக்கையொன்று வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் மாநகர ஆணையாளர்கள் மற்றும் சபை செயலாளர்களின் கீழ் கொண்டு வரப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

19ஆம் திகதியுடன் பதவிக்காலம் முடிவடையும் உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை 341 ஆகும். இது மாநகர சபைகள் மற்றும் பிராந்திய சபைகளை உள்ளடக்கியது.

### சுதந்திர சதுக்க...

கொழும்பு 7இல் அமைந்துள்ள சுதந்திர சதுக்க வளாகத்திற்குள் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாத்திரம் உள்ளே செல்ல முடியும் எனவும் பொலிஸார் நேற்று (14) பிற்பகல் தெரிவித்தனர். உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் சுதந்திர சதுக்க வளாகத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமாயின் பொது நிர்வாக அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர். சுதந்திர சதுக்க வளாகம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் நேற்றுமாலை ஈடுபடுத்தப்பட்டனர்.

### தேர்தல் நடத்தப்படாமை:...

தேசிய மக்கள் சக்தியின் செயலாளர், விசேட வைத்தியர் நிஹால் அபேசிங்க, கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

நிதி அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர், அரச அச்சகர், பொலிஸ்மா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், பிரதமர் உட்பட அமைச்சரவையின் 35 உறுப்பினர்களும் இந்த மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

### மைத்ரியின் ரிட் மனுவை...

ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழாமிற்காக மேன்முறையீட்டு நீதிமன்றின் சிரேஷ்ட நீதியரசர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் பந்துல கருணாரத்ன அறிவித்துள்ளார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவினை விசாரணை செய்து தீர்ப்பினை அறிவிக்கும் வரை, அவருக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாடுகளை விசாரணைகளுக்கு உட்படுத்தாமல் நிறுத்தி வைக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றினால் கோட்டை நீதவான் நீதிமன்றின் நீதவானுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் நீதியரசர் நிஷ்ஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ மரிக்கார் ஆகிய நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்றும் அதனை பொருட்படுத்தாது கடமையிலிருந்து தவறியதாக அருட்தந்தை சிறில் காமினி உள்ளிட்ட இருவரால் கோட்டை நீதவான் நீதிமன்றில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த முறைப்பாட்டினை ஆராய்ந்த நீதவான் நீதிமன்றம் சந்தேக நபரான முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் அறிவிப்பு விடுத்துள்ளது.

குறித்த அறிவிப்பு சட்டத்திற்கு முரணாக விடுக்கப்பட்டுள்ளதாகவும், அதனை செல்லுப்படியற்றதாக்குமாறும் தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் குறித்த நீதிப்பேராணை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உயர்கல்வித்துறை...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வி அமைச்சு உள்ளிட்ட அரசாங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் பல்வேறு பல்கலைக்கழகங்களின் பிரதானிகள் உள்ளிட்ட உயர் கல்வித்துறையுடன் தொடர்புபட்ட நிபுணர்கள் இதில் கலந்துகொண்டு தமது கருத்துகளை முன்வைத்தனர்.

உயர்கல்வித்துறையின் விடயங்களைக் கையாள்வதற்குத் தனியான மத்திய அதிகாரம் கொண்ட அமைப்பை உருவாக்க வேண்டிய தேவை குறித்து இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விஸ்தரிப்பது தொடர்பில் பொருத்தமான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்ற விசேட குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

உயர்கல்விக்கான வாய்ப்புகளை விஸ்தரிப்பதற்கு அடிப்படைக் கட்டமைப்பு மாற்றங்கள் தேவைப்படுவதாகக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். உயர்கல்வி தொடர்பான அனைத்து விடயங்களையும் கையாள்வதற்கும் தனியான மத்திய அதிகாரம் கொண்ட அமைப்பு உருவாக்கப்படுவது பொருத்தமானதாக இருக்கும் என்றும், இவ்வாறு அமைக்கப்படக்கூடிய அமைப்பின் ஒரு பிரிவு அரசாங்கப் பல்கலைக்கழக விடயங்களைக் கையாள முடியும் என்றும், மற்றைய பிரிவு பல்கலைக்கழகங்களுக்கான பதிவுகள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்கள் குறித்த விடயங்களைக் கையாள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார். இருந்தபோதும் இது குழுவின் இறுதி முடிவு அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்கல்வி வாய்ப்புகளை விஸ்தரிப்பதற்கு அரச தனியார் கூட்டாண்மையை ஏற்படுத்துவது மற்றும் அரசு அல்லாத உயர்கல்வித் துறைக்குத் தேவையான கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குவது தொடர்பிலும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும், தேவையான அமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளும்போது மேலதிகமான மாணவர்களை உள்ளீர்க்க முடியும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

உயர்கல்வியை விஸ்தரிப்பதற்கு கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றுக்குத் தனியான பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் தேவையையும் அவர் இங்கு வலியுறுத்தினார். உயர்கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் அவர் இக்குழு முன்னிலையில் முன்வைத்தார்.

இது தவிரவும், தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வி அமைச்சின் அரசு அல்லாத உயர்கல்வித் துறைப் பிரிவு மற்றும் கல்வி அமைச்சின் விசேட ஆலோசகர் உள்ளிட்ட பலரும் குழு முன்னிலையில் தமது பரிந்துரைகளை முன்வைத்தனர்.

இந்நாட்டில் இயங்கிவரும் அரசாங்கப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் கருத்துகளைப் பெற்றுக் கொள்வதற்கும் குழு தீர்மானித்தது.

இந்தக் குழுவின் அமர்வுகளில் அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், அநுர பிரியதர்ஷன யாப்பா, எரான் விக்ரமரத்ன, சரித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### புகையிரத திணைக்களத்தின்...

கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2321/07இன் படி, புகையிரத சேவை அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 1979ஆம் ஆண்டு 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் பிரகாரம் அத்தியாவசிய பொது சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பஸ் சேவையின், அனைத்து ஊழியர்களினதும் விடுமுறையை நேற்று (14) முதல் உடன் அமுலாகும் வகையில் இரத்துச்செய்வதற்கு புகையிரத பொது முகாமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பஸ் சேவையை தடையின்றி, வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்ல நாளை (15) பணிக்கு சமூகமளிக்காத அனைத்து ஊழியர்களிடமும் அது தொடர்பான அறிக்கையை கோருமாறு புகையிரத பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ்.குணசிங்க அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சித்திரைப் புத்தாண்டுக்கு...

சாரதிகள் மற்றும் பஸ் நடத்துனர்களுக்கான பற்றாக்குறையினால் இலங்கை போக்குவரத்து சபைக்குரிய 800 வரையிலான பஸ்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை இணைத்துக்கொண்டு எதிர்வரும் தமிழ்-சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் அவற்றை சேவையில் மீண்டும் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (14) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பின்போது, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களுக்கும் இடையிலான தேவையற்ற போட்டிகளின் காரணமாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதனால், உயிரிழப்புகளும் இடம்பெறுகின்றன. அதனால், தனியார் பஸ் ஊழியர்கள் அரச போக்குவரத்து பஸ் ஊழியர்களை தாக்கி, அதில் குற்றவாளிகளாக கருதப்படுபவர்கள் தனியார் பஸ் ஊழியர்கள் என்றால் அவர்களின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய தீர்மானித்திருக்கின்றோம். அதேவேளை, அரச போக்குவரத்து சபை ஊழியர்கள் குற்றவாளிகளாக கருதப்பட்டால் அவர்களுக்குரிய தண்டனைகளை பெற்றுக்கொடுப்போம்.

சாரதிகள் மற்றும் பஸ் நடத்துனர்களின் பற்றாக்குறை காரணமாக, போக்குவரத்து சபைக்குரிய 800 வரையிலான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் தரித்து வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இந்த பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக சாரதிகள், பஸ் நடத்துனர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ள அரச சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது. அதற்கான, நடைமுறை பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் அந்த 800 பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம் என்றார்.

### அத்தியாவசிய சேவைகள்...

**நா.தினுஷா**

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையை ஆட்சேபித்து தொழிற்சங்கங்களினால் முன்னெடுக்கப்படும், தொழிற்சங்க நடவடிக்கையினால் இன்று (15) அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிக்கும் என அஞ்சப்படுகின்றது.

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வரிக்கொள்கையை நீக்கி, வரி அறவீட்டு முறையை மாற்றியமைக்க வேண்டுமென்றுகோரி கடந்த இரு மாதங்களாக தொழிற்சங்கங்கள் பல்வேறு விதமான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன. அந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் சங்கங்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தையொன்றும் இடம்பெற்றிருந்தது. இந்த கலந்துரையாடலின்போது, பேச்சுவார்த்தையின் மூலம் இதற்கு ஓர் தீர்வை எட்டுவோம் என்று தொழிற்சங்கங்களுக்கு ஜனாதிபதி அறிவித்திருந்தபோதும், அதன் பின்னர் அரசாங்கத் தரப்பிலிருந்து எந்தவொரு முடிவும் கிடைத்திருக்கவில்லை.

இந்நிலையில், கடந்த முதலாம் திகதி தொழிற்சங்கங்கள் நாடு தழுவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தன. அதன் பின்னரும் அரசாங்கத்தரப்பிலிருந்து வரி திருத்தம் தொடர்பில் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்காமையின் காரணமாகவே இன்றைய தினம் சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் மீண்டுமொரு பாரிய பணிப் பகிஷ்கரிப்புக்கு தயாராகியுள்ளதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கங்களின் ஒன்றியம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், மின்சாரத் துறை சார்ந்த தொழிற்சங்கங்கள், துறைமுக சேவையுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள், அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள், தபால் சேவைப்பிரிவு, தனியார் துறையினர், மத்திய வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம், புகையிரத தொழிற்சங்கள், நீர்ப்பாசன திணைக்களத்தின் தொழிற்சங்கங்கள், சுங்கப்பிரிவை சேர்ந்த தொழிற்சங்கங்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்வி சார்ந்த தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட 45இற்கும் அதிகமான தொழிற்சங் கங்கள் இணைந்து இந்த தொழிற்சங்க நடவடிக் கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளன.

வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் ஏனைய தொழிற்சங்களின் கோரிக்கைக்கு தாமும் ஆதரவளிப்பதாக சுங்க அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது. இன்றைய தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளித்து அலுவலக சேவை மற்றும் நுகர்வோர் சேவைகளிலிருந்து நீங்குவதற்கு நீர் விநியோகம் தொழிற்சங்கங்களின் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று (14) நள்ளிரவு முதல் புகையிரத பொறியியலாளர்கள் உள்ளிட்ட புகையிரத தொழிற்சங்கம் ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதுடன் புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம், புகையிரத முகாமைத்துவ சங்கம் மற்றும் புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் பங்குபற்றப் போவதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தபால் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் நேற்று (14) நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் நேற்று (14) முதல் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். பல அத்தியாவசிய சேவைத்துறைகளின் தொழிற்சங்கங்கள் திட்டமிட்டுள்ள பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவை வழங்குவதற்காக சுகயீன விடுமுறைக்கு விண்ணப்பிக்கவும் இன்று பணிக்குச் செல்வதை தவிர்க்கவும் மின்சாரசபை தொழிற்சங்கங்கள் தீர்மானம் எடுத்துள்ளன.

இந்த காலகட்டத்தில் திட்டமிட்ட மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என்றும், இதனால் மின் தடை ஏற்பட்டால் அதனை சீரமைக்கும் செயற்பாடுகள் தாமதமாகலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரு தினங்களாக மருத்துவத்துறை இந்த தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்திருந்ததுடன் இன்றைய தினம் அவசர மற்றும் அத்தியாவசிய சிகிச்சைப் பிரிவு வழமைபோல் சேவையில் ஈடுபடும் என்பதுடன் ஏனைய சேவைகள் இன்று ஸ்தம்பிக்கும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவித்தார். வங்கிச் சேவையும் இன்று பாதிக்கப்படும் என்று வங்கி தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளதுடன் துறைமுக செயற்பாடுகளும் முடங்கும் என்றும் துறைமுக ஸ்ரீ லங்கா சுதந்திர சேவை சங்கத்தின் தலைவர் பிரசன்ன களுத்தரகே தெரிவித்தார்.

அதற்கமைய, இன்றைய போராட்டத்தின் காரணமாக இந்த நாடு முழுமையாக ஸ்தம்பிக்கும் என்று எதிர்பார்ப்பதுடன் அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்காவிட்டால் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட எதிர்பார்த்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றும் கொழும்பு உள்ளிட்ட நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு...

களுத்துறை பிரதேச சபையில் இரண்டு ஆண் உறுப்பினர்களுக்கும் பெண் உறுப்பினர் ஒருவருக்கும் புத்தாடைகள் வழங்கிய சம்பவத்தினால் நேற்று (14) பதற்ற நிலைமை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று இடம்பெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தின்போது களுத்துறை உள்ளூராட்சி சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் மனோஜ் டி சில்வா, மக்கள் விடுதலை முன்னணி மூன்று உறுப்பினர்களுக்கும் புதிய ஆடைகளை வழங்க முயற்சித்துள்ளார்.

உண்ணவோ உடுத்தவோ முடியாத நிலை நாட்டில் இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் எப்போதும் கூறுவதால், தான் இந்த ஆடைகளைக் கொண்டு வந்ததாக உறுப்பினர் மனோஜ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்வரும் புத்தாண்டுக்கு இந்த மூன்று புதிய ஆடைகளைக் கொண்டு வந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜே.வி.பி.யின் இரண்டு ஆண் எம்.பி.க்களும் பெண் எம்.பி.யும் அதனை மிகுந்த வெறுப்புடன் நிராகரித்ததையடுத்து, சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜே.வி.பி. உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேறினர்.

### மேல், மத்திய மாகாண...

விடுத்திருக்கும் அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரச, தனியார்த்துறையின் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று மேற்கொள்ளவிருக்கும் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஆசிரியர் மற்றும் அதிபர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். அதனால் மேல்மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைகளில் செயற்படுத்திவரும் ஆண்டு இறுதிப்பரீட்சையின் இன்று 15ஆம் திகதி இடம்பெற விருக்கும் பாடங்களை எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம், தரம் 9 கணிதம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய பாடங்கள் 21ஆம் திகதியும் தரம் 10 மற்றும் 11இன் இரண்டாம் தொகுதி பாடங்கள் 22ஆம் திகதியும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மத்திய மாகாணத்திலும் ஒத்திவைப்பு**

மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடத்தப்படவிருந்த தவணைப் பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், இன்று 15ஆம் திகதி இடம்பெறவிருந்த 6 - 9ஆம் வகுப்புகளுக்கான பரீட்சைகள் 17ஆம் திகதி வரையிலும், 10 மற்றும் 11ஆம் வகுப்புகளுக்கான பரீட்சைகள் 22ஆம் திகதி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

### விடைத்தாள் மதிப்பீடு...

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் தொடர்பில், அமைச்சரவை என்றவகையில் செய்யக்கூடிய சகல விடயங்களையும் செய்தும், பல்வேறு சிக்கல் நிலைமைகளை சந்திக்க நேர்ந்துள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சரவைக்கு விளக்கமளித்திருந்தார்.

சர்வதேச பாடசாலைகளில் குறிப்பிட்ட நேரத்துக்கும் அப்பால், பாடம் மற்றும் பாடம் சார்ந்த செயற்பாடுகள் முறையாக முன்னெடுப்பதன் காரணமாகவே, பண வசதி இருக்கும் மாணவர்கள் அந்தப் பாடசாலைகளில் சேர்ந்துகொள்கிறார்கள். ஆனால், பெரும்பான்மையான மாணவர்கள் அரச பாடசாலைகளிலேயே கல்வி கற்று வருகிறார்கள். கடவுளாக போற்றப்படும் ஆசிரியர்கள், வரலாற்றில் ஒருபோதும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலான தீர்மானங்களை எடுத்ததில்லை.

இருந்தபோதும், அரசியலில் பிணைக்கப்பட்டுள்ள தொழிற்சங்கங்கள் கடந்த காலங்களில் அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கை, பணிப் பகிஷ்கரிப்பு உள்ளிட்ட பல்வேறு முறைகளினூடாக ஆசிரியர்களை வீதிகளுக்கு கொண்டுவரும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலைமை கவலைக்குரியதாகும்.

ஆசிரியர்களுக்கான கொடுப்பனவில் பற்றாக்குறை இருப்பதாக தெரிவித்தும் கடந்த காலங்களில் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தார்கள். அரசாங்கத்துக்கு நிதி பற்றாக்குறை இருந்தாலும் அவர்களின் கொடுப்பனவுகளுக்காக பெருந்தொகை நிதியை செலுத்தியிருந்தோம். அவ்வாறிருக்கையில், பரீட்சை விடைத்தாள் மதீப்பீட்டு நடவடிக்கைகளுக்கான கட்டணம் நூறு வீதத்துக்கும் மேலதிகமாக அதிகரித்திருந்தாலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் அவர்களின் மதிப்பீட்டு கடமைகளை முன்னெடுக்க முடியாது என்று கூறுவதாக கல்வி அமைச்சர், அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

ஆகவே, விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களும் சுதந்திரக் கல்வியினூடாகவே தற்போதைய நிலைமை அமைந்திருக்கின்றது. அரசாங்கத்தால் முடிந்தால் தற்போது நடைமுறையிலிருக்கும் வருமான வரி முறையை நீக்க முடியும். ஒட்டுமொத்த அரச பணியாளர்களிலும் 10 சதவீதமானவர்களே இந்த வரிக் கொள்கையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இந்த 10 சதவீதத்திலும் மாதாந்தம் ஒரு இலட்ச ரூபாவுக்கும் அதிக வருமானத்தை பெறுபவர்களே இந்த வரியை செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள். அரசாங்கம் விரும்பி வரி அதிகரிப்பை மேற்கொள்ளவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அவ்வாறு இல்லாவிட்டால் நாடு இன்னும் நெருக்கடிக்குள்ளாகும். இந்த நிலைமையை புரிந்துகொண்டு மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குட்படுத்திவிடாமல், மாணவர்களின் பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பரீட்சைகளை சீர்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

### இலங்கையில் எங்களை...

விசாரணைகள் தொடர்பாக சி.ஐ.டியின் முன் அனுமதியுடன் விசாரிக்க வாய்ப்புள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் மேற்பார்வையில் இந்தக் குற்றவாளிகளை விசாரிக்கும் சந்தர்ப்பம் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்துவின் பாதுகாப்பு குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏனெனில், ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகிய இருவரும் பொலிஸின் பல ஊழல் அதிகாரிகளுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாக புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

ஹரக் கட்ட மற்றும் குடு சலிந்து தொடர்பான விசாரணைகளின் மூலம் தெரியவந்த தகவல்களின் அடிப்படையில், அந்த அதிகாரிகள் தொடர்பிலான எதிர்கால விசாரணைகள் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளின் கவனம் செலுத்தப்படும்.

பெப்ரவரி 12ஆம் திகதி தனியார் ஜெட் விமானத்தில் செல்வந்தர்கள் போல் வேடமணிந்து மடகஸ்கருக்குச் சென்ற ஹரக் கட்டா, குடு சலிந்து உள்ளிட்ட ஆறு பாதாள உலகக் குற்றவாளிகள் மார்ச் 1ஆம் திகதி மடகஸ்கர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த பாதாள உலகக் குற்றவாளிகளைத் தவிர, ஹரக் கட்டாவின் மனைவியாகக் காட்டிக் கொண்ட மலேசியாவைச் சேர்ந்த பெண்ணும், அவருடைய தந்தையும் கைதாகினர்.

இந்த குழு அந்நாட்டின் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் இலங்கைக்கு அறிவிக்கப்பட்டது. சர்வதேச சட்டத்தின்படி சர்வதேச பொலிஸாரால் சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்ட ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரை இலங்கையிடம் ஒப்படைக்க மடகஸ்கரின் பாதுகாப்புப் படையினர் உடன்பட்டுள்ளனர்.

சி.ஐ.டி. மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் நான்கு அதிகாரிகள் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமையன்று மடகஸ்கருக்குச் சென்றுள்ளனர். மேலும் ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரை நேற்றுமுன்தினம் (13) காவலில் எடுத்துள்ளனர். அவர்கள் மடகஸ்கரில் இருந்து மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள ஒரு விமான நிலையத்திற்கு ஆபிரிக்க பிராந்தியத்தின் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தில் கொண்டு வரப்பட்டனர்.

இந்தக் குழு மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள விமான நிலையத்தில் பல மணி நேரம் தங்க வேண்டியிருந்தது.

அந்த நேரத்தில், ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் விமான நிலையத்தின் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானத்தில் அழைத்து வரப்பட்டபோது, ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் இலங்கைக்கு மீண்டும் அழைத்துச் செல்லப்படுவதை அறிந்து அதிகமாக பீதியடைந்திருந்ததாகவும் அதே வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

தங்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த வேண்டாம் என அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. மடகஸ்கர் பாதுகாப்புப் பிரிவினரால் குற்றவாளிகளின் வசமிருந்த கைத்தொலைபேசிகளும் விசேட பொலிஸ் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கையடக்கத் தொலைபேசிகள் மூலம் ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்துவின் போதைப் பொருள் வலையமைப்பு மட்டுமன்றி பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்பில் இருந்த பலர் தொடர்பிலான தகவல்களையும் கண்டறிய முடியும் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று இவர்கள் இந்தியாவினூடாக இலங்கை அழைத்துவரும்போது ஏற்பட்ட விசா சிக்கல் காரணமாக ஒரு நாள் மட்டும் பாதுகாப்புடன் இந்தியாவில் தரித்து நிற்கவேண்டியேற்பட்டதாக தெரியவந்தது.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

ஹரக் கட்டா எனப்படும் பாதாள உலகக் குழுவின் தலைவனுடன் மடகஸ்கரில் கைது செய்யப்பட்ட குடு சலிந்துவின் தாயார், தனது மகனின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

பாதாள உலகத் தலைவரான மாகந்துரே மதூஷின் தலைவிதியை எதிர்கொள்ளும் திட்டம் தனது மகனுக்கும் இருப்பதாக தெரியவந்துள்ளதாக குடு சலிந்துவின் தாய் கூறியுள்ளார்.

நாட்டின் சட்டத்தின்படியே தனது மகனுக்கு எந்தவொரு தண்டனையும் சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டும் என்றும், சட்டத்துக்குப் புறம்பாக தனது மகனின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது மகன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்த திறமையானவர் என்பதையும், கெட்ட நண்பர்களின் சகவாசத்தால் தனது மகன் வழிதவறிச் சென்றதை ஏற்றுக்கொள்வதாகவும் குடு சலிந்துவின் தாய் மேலும் தெரிவிக்கின்றார்.

இதற்கிடையில் ஹரக் கட்டாவின் தந்தையாரும் தனது மகனை பாதுகாக்கக்கோரி மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** கடின உழைப்பால் உடல் அசதி, ஏதோ பயனத்தினால் மனம் தடுமாறிக்கொண்டிருக்கும்.

**ரிஷபம்:** உடல், மனம் சோம்பிக் காணப்படும், அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**மிதுனம்:** விவாகப் பேச்சுகளால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும், கடல் தாண்டிய பயணத்தால் நன்மை உண்டு.

**கடகம்:** நீண்டநாள் நோயிலிருந்து விடுதலை, சத்துருகளால் தன லாபங்கள் உண்டு.

**சிம்மம்:** தொழில் ரீதியான நட்டங்கள் ஏற்படும், குழந்தைகளால் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** யாரையும் நம்புவதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது தவிப்பீர்கள், எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம்.

**துலாம்:** உங்களுக்கான நகை. உடைகளை வாங்குவீர்கள், துணிவோடு நடைபோடுவீர்கள்.

**விருச்சகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாது திண்டாடுவீர்கள், மனதைரியம் குன்றி சோம்பலுடன் காணப்படும்.

**தனுசு:** மனதைரியத்தடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**மகரம்:** கவனமாக நடந்துகொள்ளுங்கள், தேவையற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம்.

**கும்பம்:** உங்கள் காதலியுடன் உல்லாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள், தொழில், வியாபார லாபம் உண்டு.

**மீனம்:** நீங்கள் எதிர்பார்த்த தொழில் அமையும், குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக இருப்பிர்கள்.

| | |
|---|---|
| **திதி** | அஷ்டமி பி.ப.6.46 வரை பின் நவமி |
| **நட்சத்திரம்** | கேட்டை மு.ப.7.33 வரை பின் மூலம் |
| **யோகம்** | சித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| **வார சூலை** | தென் மேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | மு.ப. 9.19 – 10.19 மணி வரை |
| **ராகு காலம்** | 12.19 – 1.49 மணி வரை |
| **எமகண்டம்** | 7.49 – 9.19 மணி வரை |
| **குளிகை** | 10.49 – 12.19 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்** | பூசம்,அனுஷம், உத்தரட்டாதி,ஆயிலியம், கேட்டை,ரேவதி (பிறந்தவர்களுக்கு) |
| **விசேட தினம்** | ------ |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# சட்டக் கல்லூரியின் பரீட்சைகளை ஆங்கிலத்தில் மாத்திரம் நடத்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் இணக்கமில்லை







இலங்கை சட்டக் கல்லூரியின் பரீட்சைகளை ஆங்கில மொழியில் நடத்துவதை கட்டாயமாக்குவது தொடர்பில் சட்டக் கல்விப் பேரவை எடுத்த தீர்மானத்துடன் நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழு இணங்கவில்லை.

அமைச்சர் (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

சட்டக் கல்லூரியின் பரீட்சைகளை ஆங்கில மொழியில் நடத்துவதைக் கட்டாயமாக்குவது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கான காரணம் மற்றும் அதன் பின்னணி என்ன என்பது குறித்து குழுவில் ஆஜராகியிருந்த உறுப்பினர்கள், சட்டக் கல்லூரியின் அதிபர் கலாநிதி அத்துல பத்தினாயக்கவிடம் கேள்வியெழுப்பினர்.

சட்டத்துறையில் தற்போது திறமையாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் சட்டக் கல்லூரியில் தமக்கு விருப்பமான மொழியில் தோற்றியவர்கள் என்பது இக்குழுவில் கலந்துகொண்ட பெரும்பான்மையான உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருந்தது. எனவே, சட்டத்தரணிகளாக விரும்புபவர்கள் தங்கள் தாய்மொழியில் பரீட்சை எழுதுவது சிறந்து விளங்குவதற்கு ஒருபோதும் தடையாக இருந்ததில்லை என்பதும் குழுவின் கருத்தாகக் காணப்பட்டது.

அத்துடன், ஆரம்ப நீதிமன்றங்களில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகியன பிரதான மொழிகளாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதும் குழு உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருந்தது. மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் மாத்திரம் ஆங்கில மொழி பயன்படுத்தப்படுகிறது. மேலும், வடக்கில் தமிழ், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் நீதிமன்ற விசாரணைகள் தமிழிலும், சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் சிங்கள மொழியிலும் நீதிமன்ற விசாரணைகள் நடைபெறுவதாகவும் அங்கிருந்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

பெரும்பாலான கிராமப்புறங்களில் ஆங்கிலக் கல்வி குறைவாக இருப்பது உண்மை என்றும் ஆங்கிலத்தில் பரீட்சையை கட்டாயமாக்குவது அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமையும் என்றும் உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர். எனவே, ஒரு மாணவர் தனது முதன்மை மொழியான தாய்மொழியில் பரீட்சையை எதிர்கொள்வதற்கான சுதந்திரம் காணப்பட வேண்டும் என்பதும் குழுவின் கருத்தாக அமைந்தது.

# சட்டவிரோத மணல் அகழ்வு குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குக!

**மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு**



கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இத்தாவில், முகமாலை போன்ற இடங்கள் உட்பட மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு குற்றச்சாட்டு தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்குமாறு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.

இதேநேரம் போதைப்பொருள் பரவல் மற்றும் சமூகச் சீர்கேடுகளிலிருந்து எமது இளைய தலைமுறையினரை பாதுகாப்பதற்கு அதிகாரிகள் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும், பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாய்த்தக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 72 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன், சத்திர சிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், முன்னுரிமை அடிப்படையில் பட்டியலிடப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல் உற்பத்திகளில், சுமார் 5 இலட்சத்து 85 ஆயிரத்து 832 கிலோகிராம் நெல்லை இதுவரை விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கிலோ 100 வீதம் கொள்வனவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில், மாவட்டத்தின் சமூகப் பாதுகாப்பு, அபிருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆயிரத்து 128 கிலோ பீடி இலைகளுடன் ஒருவர் கைது



புத்தளத்தில் கடத்தப்பட்ட ஆயிரத்து 128 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் முக்குத்தொடுவாவ பகுதியில் நேற்று முன்தினம் (13) இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 1,128 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள் ஏற்றிச்செல்லப்பட்ட லொறியொன்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், பீடி இலைகள் ஏற்றப்பட்ட லொறியுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

# தேசிய பௌதீகத் திட்டம் இறுதி ஒப்புதலுக்காக ஏப்ரலில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன**



தேசிய பௌதீகத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இறுதி ஒப்புதலுக்காக ஏப்ரல் மாதம் சமர்ப்பிக்கப்படுமென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

'தேசிய பௌதீக திட்டம்-2048' தயாரிப்பது தொடர்பாக பத்தரமுல்லை, செத்சிறிபாயவிலுள்ள தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நேற்று (14) நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் அனுமதி கிடைத்த பின்னர் தேசிய பௌதீக திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும். இது தவிர அது வர்த்தமானியில் வெளியிடப்படும். மேலும் தேசிய பௌதீகத் திட்டம் பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்றத்தின் அமைச்சின் ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

தற்போது தயாரிக்கப்பட்டுவரும் தேசிய பௌதீகத் திட்டம், தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் காமினி ஹேவகேவினால் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்தவிடம் கையளிக்கப்பட்டது.

முதலாவதாக இந்நாட்டில் 2007இல் தேசிய பௌதீகத் திட்டம் தயாரிக்கப்பட்டது. பின்னர் அது 2019இல் புதுப்பிக்கப்பட்டது. தேசிய பௌதீகத் திட்டம் – 2048இன் கருப்பொருள் "ஒரு திட்டமிடப்பட்ட நிலை பேறான வளமான தேசம்" என்பதாகும்.

தேசிய பௌதீகத் திட்டங்கள் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அறிஞர்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை எடுத்துக்கொண்டு தயாரிக்கப்படுகின்றன. தற்போது தயாரிக்கப்பட்டுவரும் தேசிய பௌதீகத் திட்டம், அமைச்சின் செயலாளர்கள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

தேசிய பௌதீக திட்டமிடல் குழுவின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அதன் பிரதித் தலைவர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் இது இடம்பெற்றுள்ளது. குழுவின் செயலாளர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் ஆவார்.

இந்த தேசிய பௌதீக திட்டம் தற்காலத்திற்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டதுடன், புதுப்பித்தலுக்காக குறிப்பிட்ட காலக்கெடுவை அமைக்கவும் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடும் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதில் தாமதம் ஏற்படுவதால், அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதுடன், பொதுமக்களும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். மேலும், அரசாங்கம் மாறும்போது, தேசிய திட்டங்களில் ஏற்படும் மாற்றம், நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது.

எவ்வாறாயினும், தேசிய பௌதீக திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக அமையும் எனவும் மக்களின் தேவைகள் நிவர்த்திசெய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மார்ச் 15ஆம் திகதி, புதன்கிழமை**

# இலங்கை எரிபொருள் துறையில் மூன்றாவது சக்தி தேவைதானா?

எரிபொருள் விநியோகத்தை விஸ்தரிக்க அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும், அதற்கான முறையான வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் (13) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேவைக்காக எரிபொருள் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கு தமது நிறுவனம் தயாராக இருப்பதாக சினோபெக் குழுமப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்காக, தற்போதுள்ள முறைமைக்கு அமைவாக தமது நிறுவனம் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்த குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகள், அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள ஹம்பாந்தோட்டையில் பிரதான வலுசக்தி மையத்தை, சுத்திகரிப்பு நிலையத்துடன் நிர்மாணிக்கத் தேவையான முழு முதலீட்டையும் தமது நிறுவனம் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

எதிர்காலத்தில் நாட்டின் அபிலாஷைகளின் அடிப்படையில் உரிய அழைப்புகளுக்குப் பங்கேற்க தமது நிறுவனம் தயாராக இருப்பதாகவும் அப்பிரதிநிதிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு மற்றும் விநியோகம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சினோபெக் நிறுவனப் பிரதிநிதிகள், அது குறித்து தமது ஆலோசனைகளையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் பின்னர், இலங்கை துரித அபிவிருத்தியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். அதேபோன்று, நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தகங்களை எதிர்காலத்தில் ஊக்குவிக்க எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் மிகப்பெரிய எண்ணெய் மற்றும் எரிசக்தி கூட்டுத்தாபனமான சினோபெக், இலங்கை எரிபொருள் சந்தையில் சில்லறை வர்த்தக வாய்ப்புகளை கடந்த பல வருடங்களாகவே கவனித்து இப்போது இந்த இடத்தை அடைந்துள்ளது.

பெய்ஜிங்கை தளமாகக் கொண்ட இந்நிறுவனம் இலங்கையின் பெற்றோலிய சந்தையில் பொருட்களை இறக்குமதி செய்யவும், விற்பனை செய்யவும் மற்றும் விநியோகிக்கவும் நுழைய ஆர்வமாக உள்ளது. சினோபெக், ஏற்கனவே அம்பாந்தோட்டை துறைமுகத்தில் உள்ளது. அங்கு அது எண்ணெய் கிடங்கொன்றை இயக்குகிறது.

எதிர்காலத்தில் சினோபெக், எரிபொருள் இறக்குமதி, விநியோகம் மற்றும் பெற்றோலிய பொருட்களை விற்பனை செய்வதற்கு இலங்கை சந்தையில் நுழையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடுமையான அந்நிய செலாவணி நெருக்கடியினால் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளைச் சேர்ந்த அதிகமான நிறுவனங்களுக்கு எண்ணெய் இறக்குமதி செய்து சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை இலங்கையில் தொடங்குவதற்கு எரிசக்தி அமைச்சரின் முன்மொழிவுக்கு கடந்த வருடம் ஜூன் மாதமே அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அதன் தொடர்ச்சியாகவே இப்போது சினோபெக் இலங்கையில் கால்பதிக்க இறுதிக்கட்ட ஏற்பாடுகள் நடக்கின்றன.

அரசுக்கு சொந்தமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் 90 வீதத்தை வழங்குகின்றது, எஞ்சிய 10 வீதமானது லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (IOC) மூலம் வழங்கப்படுகின்றது. கடந்த காலங்களில் எரிபொருள் நெருக்கடி இருந்தாலும் காலப்போக்கில் நிலைமை சற்று சீரானது. எரிபொருள் விநியோகத்தில் இந்தியாவின் பங்களிப்பு இருந்ததை எவரும் மறந்துவிட முடியாது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 1,200 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 800 நிரப்பு நிலையங்களை சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு விற்க அரசாங்கம் ஆலோசிப்பதாக தெரிகிறது. இறுதியில், சேமிப்பு, சுத்திகரிப்பு மற்றும் பிற வசதிகள் உட்பட நிறுவனத்தின் அனைத்து சொத்துகளையும் மறைமுகமாக தாரைவார்க்கவே முயல்கிறது அரசு.

சர்வதேச நாணய நிதியத்தால் கட்டளையிடப்பட்ட ஒரு பரந்த சிக்கன வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தனியார்மயமாக்கல் ஆகும். கொரோனா மற்றும் உக்ரைனுக்கு எதிரான யுத்தத்தால் உக்கிரமடைந்த முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடி, இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடி போன்றவற்றின் முழுச் சுமையையும் மக்கள் மீது சுமத்தும் அரசின் முயற்சியின் ஓர் அங்கமே இது.

இதில் இன்னொரு பக்கமும் உண்டு. சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு இலங்கையில் இடமளித்து எரிபொருள் சந்தையில் போட்டியை உருவாக்க முயல்கிறது ரணில் அரசு. ஏற்கனவே இந்தியா எரிபொருள் சந்தையில் ஈடுபட்டு இலங்கையில் இருக்கும்போது புதிதாக சீன நிறுவனத்தை உள்ளே கொண்டுவந்து இராஜதந்திர விபரீத விளையாட்டில் ஈடுபட முயல்கிறார் ரணில். எரிபொருள் சேவைகளை மேம்படுத்தும் தேவை இருக்குமெனில் இப்போது சேவையில் உள்ள இந்திய நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளாமல் சீனாவை உள்ளே வரவழைப்பதன் மூலம் புதியதொரு அதுவும் தேவையற்ற சர்ச்சையொன்று இலங்கையால் உருவாக்கப்படுகிறது.

இலங்கையில் சீனா ஏற்கனவே கால்பதித்து தங்களுக்கெதிராக வேலை செய்வதாக புதுடில்லி காலங்காலமாக குற்றஞ்சாட்டி வருகிறது. சீனாவின் இராணுவ சீருடை அணிந்தவர்கள் அம்பாந்தோட்டைக்கு வந்து சென்றதும், சீனாவின் உளவுக்கப்பல் இலங்கைக்கு வந்து சென்றதும் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்தன. இந்த பின்னணியில் இலங்கை எரிபொருள் சந்தையில் சீனாவுக்கு இடமளிக்கும் கொழும்பின் தீர்மானம் விஷப்பரீட்சை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கு தலையையும் சீனாவுக்கு வாலையும் காட்டி இராஜதந்திர நரித்தனத்தில் ஈடுபடுகிறார் ரணில். எரிபொருள் துறையில் மூன்றாவது சக்தியைக் கொண்டுவருமளவுக்கு பெரும் தேவைப்பாடு இல்லாத நாடு இலங்கை என்பதில் இரகசியமில்லை. ஆனால், எரிபொருள் போன்ற முக்கியமான துறையில் பிறிதொரு நாட்டை சேர்க்கும்போது பல்வேறு விடயங்களை கவனத்திற்கொள்ளவேண்டும் என்பதுகூடவா இலங்கைக்குத் தெரியாமல் போனது?

இந்த விடயத்தில் ரணில் அரசாங்கம் தேவையில்லாத வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டிருப்பது போல் தெரிகிறது.

# நெருக்கடி வேளைகளில் அடிப்படை கோட்பாடுகளை பின்பற்றவேண்டும்!



**கலாநிதி ஜெகான் பெரேரா**

2022 தொடக்கத்தில் தீவிரமடையத் தொடங்கிய பொருளாதார நெருக்கடி அதன் உடனடித் தாக்கத்தை அரசியல் களத்தில் ஏற்படுத்தியது. பெருமளவு மக்கள் வீதிகளில் இறங்கி தொடங்கிய போராட்டங்கள் இறுதியில் பிரம்மாண்டமான மக்கள் வெள்ளமாக அதிகார பீடங்களுக்குள் பிரவேசித்தது. இப்போது ஒரு வருடம் கழித்து பொருளாதார நெருக்கடி கட்டுப்பாட்டுக்குள் வரும் அறிகுறிகளை காட்டத்தொடங்கியிருக்கிறது.

நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி சில நாட்களில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சவால்களை சமாளிக்கக்கூடிய உறுதியுடையதாக தன்னை காட்டிக்கொள்கிறது. ஆனால், வெற்றி நிலைபேறானதாக இருக்கவேண்டுமானால் அரசாங்கம் மூன்று துறைகளில் அதன் அணுகுமுறையை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகும்.

முதலாவதாக, தீர்மானிக்கப்படாத எதிர்காலத்தில் அன்றி விரைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவிக்க வேண்டும். தேர்தல்கள் மக்கள் அல்லது அவர்களின் ஆட்சியாளர்கள் விரும்பும்போது நடத்தப்பட வேண்டியவை என்ற ஒரு போலியான வாதம் முன்வைக்கப்படுகிறது. தேர்தல்கள் ஜனநாயகத்தின் தவிர்க்கமுடியாத அங்கங்கள். உண்மையில் அந்த தேர்தல்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தப்படவேண்டியது அவசியமாகும்.

ஆனால், தேவையான நிதி வளங்களை அரசாங்கம் ஒதுக்கவேண்டியிருப்பதால் அந்த திகதியில் தேர்தல்கள் சாத்தியமா என்ற சந்தேகம் தொடருகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான பணம் அரசாங்கத்தின் ஒரு நாள் செலவினத்தையும் விட குறைவானது என்பதை அடிப்படையாக கொண்டு நோக்கும்போது தன்னிடம் பணம் இல்லை என்று அரசாங்கம் கூறுகின்ற காரணம் நம்பக்கூடியதாக இல்லை.

பிரச்சினைக்குரிய இரண்டாவது விவகாரம் நீதித்துறைக்கு சவால் விடுக்கும் அரசாங்கத்தின் செயலாகும். ஜனநாயக முறைமை என்பது ஆட்சிமுறையின் பல்வேறு நிறுவனங்களும் அவற்றின் அதிகாரங்களை பிரயோகிக்கும் விதங்களை ஒழுங்கமைப்பதற்கு அவசியமான தடுப்புகளையும் சமப்படுத்தல்களையும் (Checks and Balances) அடிப்படையாகக் கொண்ட முறைமையாகும். நீதித்துறை அரசின் மூன்று முக்கிய அங்கங்களில் ஒன்றாகும். அதன் அதியுயர் நிறுவனமான உயர்நீதிமன்றம் தேர்தல்களை தாமதிப்பதற்கு பணம் இல்லை என்ற காரணத்தை அரசாங்கம் கூறமுடியாது என்று கூறியிருக்கிறது. இந்த தீர்ப்பை மதித்து நடக்கவேண்டியது அவசியமாகும்.

அதை அலட்சியம் செய்வது ஆட்சிமுறையில் நெருக்கடியை தோற்றுவிக்கும். ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியின் விளைவான சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியிருக்கும் அரசாங்கத்துக்கு இது மேலும் பிரச்சினைகளை அதிகரிக்கும் என்பதுடன், இலங்கையில் முதலீடுகளை செய்ய முன்வரக்கூடியவர்களுக்கு எதிர்மறையான செய்தியொன்றை விடுப்பதாக அமையும். சட்டத்தின் ஆட்சி மதிக்கப்படாத ஒரு சூழ்நிலையில் தங்களது முதலீடுகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகக்கூடும் என்று அவர்கள் கவலையடைவார்கள். துரதிர்ஷ்டவசமாக திறைசேரிக்கு உத்தரவைப் பிறப்பித்த உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சவால் விடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

தற்போது இடம்பெறுகின்ற வீதிப் போராட்டங்களை பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்தி தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுடன் தொடர்புடையதே மூன்றாவது பிரச்சினைக்குரிய விவகாரமாகும். போராட்டங்களை நடத்துபவர்களுக்கு அவர்கள் வீதிகளில் இறங்கி சுதந்திரமாக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான உரிமையை அரசாங்கம் மறுக்கிறது. அத்தகைய போராட்டங்கள் மக்களின் வழமையான பொருளாதார வாழ்வை சீர்குலைக்கும் என்பதுடன், முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்கும் ஒரு தடையாக இருக்கும் என்று அரசாங்கம் காரணம் கூறுகிறது.

ஆர்ப்பாட்டங்களை செய்பவர்கள் பெரும்பாலும் தொழிற்சங்கங்களையும் அரசாங்க பல்கலைக்கழகங்களையும் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களின் ஆர்ப்பாட்டங்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகத்தையும் நீர்ப்பீரங்கித் தாக்குதல்களையும் தடியடியையும் மேற்கொள்ளும் காட்சிகளை அனேகமாக தினமும் ஊடகங்களில் பார்க்கிறோம். இராணுவ உடையில் வந்தவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொல்லுகளினால் தாக்குதல் நடத்தியதையும் ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது. சிவில் அமைதியின்மையை ஒடுக்குவதற்கு இராணுவத்தை பயன்படுத்துவது சட்டமீறலாகும். குறிப்பாக அண்மைய சம்பவத்தில் இராணுவ உடையில் வந்தவர்கள் அவர்களுக்குரிய அடையாளப்பட்டி அணிந்திருக்கவில்லை. இது அவர்கள் கொடூரமாக நடந்துகொண்டாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிச்செல்லும் வாய்ப்பை கொடுக்கிறது.

### அமெரிக்க நிலைப்பாடு

படைபலத்தை பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் பிரச்சினையை தீர்க்கப்போவதில்லை. ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் அதை கைவிடுவதற்கான சாத்தியமில்லை. அவர்கள் நாட்டின் பொருளாதார மீட்சிக்காக பெரிய விலையை செலுத்தவேண்டியவர்கள் என்று எதிர்பார்க்கப்படும் சனத்தொகையின் அடிமட்டங்களில் உள்ள 80 சதவீதத்தினரைச் சேர்ந்தவர்கள்.

பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் சனத்தொகையின் வறிய பிரிவுகள் மீது விகித சமானமற்ற முறையில் சுமையை ஏற்றுகின்றன. இதை அண்மைய மின்கட்டண அதிகரிப்பில் காணக்கூடியதாக இருக்கிறது. சமூகத்தின் உயர்மட்டங்களில் இருப்பவர்களையும் விட அடிமட்டங்களில் உள்ளவர்களே மின்கட்டண அதிகரிப்பால் பெரிதும் பாதிக்கப்படுவர்.

ஆர்ப்பாட்டங்களை அடக்குமுறை வழிவகைகளின் ஊடாக வெற்றிகொள்வதற்கு முயற்சிப்பதற்கு பதிலாக அரசாங்கம் நாடு முகங்கொடுக்கின்ற பன்முகப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு அடிப்படைக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். முதலில் அரசாங்கம் நாட்டின் ஆட்சிமுறையின் அடிப்படை 'ஜனநாயகம்' என்பதை கருத்திற்கொள்ளவேண்டும். சட்டத்தின் பிரகாரம் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடத்துவது ஜனநாயகத்துக்கு எழுச்சியைக் கொடுக்கும்.

தேர்தல்கள் தொடர்பிலான சட்டங்களை அவமதிப்பது நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அரசாங்கத்தின் நியாயப்பாட்டை அரித்துச் செல்கிறது. இதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் செய்யப்பட்ட தேசிய சட்ட மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஷங் தெளிவாகக் கூறியிருந்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அமெரிக்க தூதுவர், அந்த தேர்தல்கள் சிவில் சமூக அமைப்புகளுடன் பங்காளிகளாகச் சேர்ந்து மக்கள் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திடம் நேரடியாக நியாயம் கேட்பதற்கான ஆற்றலை அவர்களுக்கு கொடுக்கும் என்று சொன்னார். நீதித்துறையினதும் ஆர்ப்பாட்டங்களைச் செய்வதற்கான உரிமையினதும் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

"உலகம் பூராவும் ஜனநாயகங்கள் நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றன. சட்டத்தின் ஆட்சி இல்லாமல் ஜனநாயகம் நிலைக்கமுடியாது. தங்களது அக்கறைகளுக்காக அமைதியான முறையில் குரல் கொடுப்பதற்கும் தங்களது அரசாங்கத்தில் பங்கேற்பதற்கும் ஒவ்வொரு இலங்கையருக்கும் உரிமைக்கு அமெரிக்கா வழங்கும் ஆதரவு அசைக்கமுடியாததாகும். அந்த உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற சுதந்திரமான தேர்தல்களைப் பொறுத்தவரை இலங்கை பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்டிருக்கிறது'' என்றும் அவர் தனது உரையில் கூறினார்.

### கொள்கைகள் மறுபரிசீலனை

தற்போதைய நெருக்கடியில் இருந்து பொருளாதாரத்தை மீட்டெடுத்து மீண்டும் அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கு இலங்கை நம்பிக்கையுடன் காத்திருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பின்னால் இருக்கும் பெரிய வல்லாதிக்க நாடாக விளங்குவதால் அமெரிக்க தூதுவரின் கருத்துகளை விசேட கவனத்துடன் பரிசீலிக்கவேண்டியுள்ளது. உண்மையில் அரசாங்கம் அதன் பொருளாதார மறுசீரமைப்புக் கொள்கைகளையும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளையும் மறுபரிசீலனை செய்யவேண்டியது அவசியம். அதற்கு அமெரிக்காவின் நல்லெண்ணத்தால் உதவமுடியும்.

பொருளாதார மறுசீரமைப்பின் பிரதான சுமையை சனத்தொகையின் வறிய பிரிவுகள் மீது ஏற்றமுடியாது. உதாரணமாக, அதிகரிக்கப்பட்ட நேரடி வரிகள் மற்றும் மறைமுக வரிகள் மூலமாக நடுத்தர வர்க்கங்களை இரு தடவைகள் உறிஞ்சுகிறது. தனிநபர்கள் என்ற முறையிலும் குடும்பங்கள் என்ற வகையிலும் அந்த நடுத்தர வர்க்கங்கள் பொருளாதார நிலைத்தன்மையின் ஓரங்களில் நெருக்கடிகளுடன் வாழ்கிறார்கள். பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யாவிட்டால் இரண்டாவது 'அரகலய'வில் நாட்டு மக்கள் வீதிகளில் இறக்கக்கூடும்.

கடந்த வருட ஆரம்பத்தில் விவசாயிகளே முதலில் சிறிய குழுக்களாக ஆர்ப்பாட்டங்களை தொடங்கினார்கள். அவர்களைத் தொடர்ந்து கரையோரப் பகுதி மீனவர்களும் அடுத்து மரவேலை செய்பவர்களும் இறுதியாக நகர மையங்களைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தவர்களும் இணைந்தார்கள். அதைப் போன்ற ஒரு தோற்றப்பாட்டை இன்று காணக்கடியதாக இருக்கிறது. தொழிற்சங்கங்களும் துறைசார் நிபுணத்துவ வர்க்கத்தவர்களும் உட்பட மேலும் மேலும் குழுக்கள் போராட்டங்களில் இணைகின்றார்கள்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி தேர்தலுக்கான தேவை குறித்து அரசாங்கத்தை நம்பச்செய்வதற்கு எதிரணி அரசியல் கட்சிகளை ஓரணியில் கொண்டுவருவதற்கு அண்மையில் சிவில் சமூக அமைப்புக்கள் முன்முயற்சியொன்றை மேற்கொண்டன. வாக்குரிமையைப் பாதுகாப்பதற்கான சிவில் சமூகக் கட்டமைப்பினால் (Civil Society Collective for Protection of Franchise) ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்றில் வாக்களிப்பதற்கான உரிமையை பாதுகாப்பதற்கு பொதுமக்கள் பிரதிநிதிகளின் சூளுரை (Public representatives pledge to protecting the right to vote) என்ற ஆவணத்தில் கைச்சாத்திட எதிரணியின் பிரதான அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் ஒன்றுகூடினார்கள். வேறுபட்ட கோட்பாடுகளையும் இனச்சார்புகளையும் கொண்ட அரசியல் கட்சிகளாக அவை இருந்தபோதிலும், ஜனநாயக வாக்குரிமையை பேணிப் பாதுகாக்கவேண்டிய கடமையில் ஒன்றாக நின்றன.

நீதித்துறையின் தீர்ப்புகளையும் சட்டத்தின் ஆட்சியுடன் தொடர்புடைய அரசியலமைப்பு ஏற்பாடுகளையும் அரசாங்கம் மதித்து நடக்க வேண்டியது அவசியம். உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற அது இன்றியமையாததாகும். அத்தகைய நம்பிக்கையின்றி பொருளாதார மீட்சிக்கான வாய்ப்புக்கள் அறவே நடைமுறைச் சாத்தியமில்லை. அரசாங்கத்தின் கொள்கைகள் தெளிவானவையாக இருப்பதையும் நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலவுகிறது என்பதையும் அறிய முதலீட்டாளர்கள் அக்கறை காட்டுவார்கள்.

பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம், தேர்தல்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான சுதந்திரம் போன்ற முக்கியமான பிரச்சினைகளில் மக்களினதும் எதிரணி அரசியல் கட்சிகளினதும் சிவில் சமூகத்தினதும் குரல்களுக்கு அரசாங்கம் செவிமடுக்கவேண்டியதும் கூடுதல் முக்கியத்துவமுடையதாகும். இவர்களிடம் இருந்து தனிமைப்பட்டால் அது அரசாங்கம் முழுமையாக நாட்டம் கொண்டிருக்கின்ற பொருளாதார மீட்சிக்கும் அரசியல் உறுதிப்பாட்டுக்கும் உகந்ததல்ல. அரசாங்கத்தின் அபிவிருத்தி மூலோபாயங்களுக்கு சமூகத்தின் மனமுவந்த ஒத்துழைப்பு தேவை. இல்லையானால் சஞ்சலமான ஓர் அமைதியே நிலவும். அதனால் நாடு துரிதமான பொருளாதார வளர்ச்சிப்பாதையில் பயணத்தை முடுக்கிவிடுவதற்கு தேவையான வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவரமுடியாது.

## தவக்கால சிந்தனை

### கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர்



*அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: "திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ணவேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் முன்னர் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். எனவே, இக்கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் எனக் கருதப்படுவார். இவை அனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார்" என்றார்.*

## இன்றைய நாளில்...

- 1802 – இலங்கையின் முதலாவது அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது.
- 1827 – டொரண்டோ பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.
- 1952 – ரீயூனியனின் சிலாவோஸ் நகரில் 24 மணிநேரத்தில் 1870 மி.மீ. மழைவீழ்ச்சி பதியப்பட்டது. இது உலக சாதனையாக அறிவிக்கப்பட்டது.
- 1961 – தென்னாபிரிக்கா பொதுநலவாய நாடுகளில் இருந்து வெளியேறியது.
- 1990 – மிக்கைல் கொர்பச்சேவ் சோவியத் ஒன்றியத்தின் முதலாவது நிறைவேற்று அரசுத் தலைவராகத் தெரிவானார்.
- 1995 – இலங்கை கிரிக்கெட் அணி முதல் தடவையாக வெளிநாடொன்றில் கிரிக்கெட் டெஸ்ட் தொடரை நியூசிலாந்துக்கு எதிராக விளையாடி வென்றது.
- 2004 – சூரியக் குடும்பத்தில் அதிவேகமான பொருளான '90377-செட்னா' கண்டுபிடிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

**அமைச்சர்மார் திறப்பு விழாவுக்குப் போனா 'ஊ' எண்டு சத்தம் எழுப்புறாங்கள்..! ஆனா, மறுபக்கம் ஜனாதிபதிக்கு நன்மதிப்பு விருது கிடைக்குது..! எனக்கெண்டா சத்தியமா உந்த அரசியல் விளங்கேல்ல பாருங்கோ..!**






# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**01. ரிதியகம புனர்வாழ்வு நிலையத்தை மத்திய அரசுக்குக் கீழ் கொண்டுவரல்**

1975ஆம் ஆண்டில் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள ரிதியகம புனர்வாழ்வு நிலையம் 1990ஆம் ஆண்டு தென்மாகாண சபை சமூக அலுவல்கள் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் கிட்டத்தட்ட 450 பேருக்கு மாத்திரமே தங்கியிருந்து புனர்வாழ்வளிக்கக்கூடிய வசதிகள் இருப்பினும், தற்போது 576 பேர் தங்கியிருந்து புனர்வாழ்வு பெறுவதால் புனர்வாழ்வு பெறுபவர்கள் மிகவும் அழுத்தங்கள் மற்றும் சிரமங்கள் பலவற்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

இந்நிலைமையாலும், நாடளாவிய ரீதியில் நீதிமன்றக் கட்டளைகளுக்கமைய ஒப்படைக்கப் படுபவர்களும் இந்நிலையத்தில் தங்கியிருந்து புனர்வாழ்வு பெறுவதையும் கருத்திற்கொண்டு, குறித்த இப்புனர்வாழ்வு நிலையத்தை தென்மாகாண சபையின் நிர்வாகத்திற்குப் பதிலாக தேசிய மட்டத்திலான நிலையமாக மத்திய அரசின் கீழ் நிர்வகிப்பது மிகவும் பொருத்தமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, ரிதியகம புனர்வாழ்வு நிலையத்தை சமூக சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்காக மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி, நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள சந்திரிக்கா குளம் மற்றும் மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள கிரிஇப்பன் குளம் போன்ற நீர்த்தேக்கங்களின் மேற்பரப்பில் மிதக்கும் சூரிய மின்கல மின்னுற்பத்தித் தொகுதியை அமைக்கும் முன்னோடிக் கருத்திட்டம்**

கொரிய குடியரசுக்கும், இலங்கைக்கும் இடையில் 2009ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட உதவி வழங்கும் வேலைச் சட்டகத்தின் கீழ் கொரிய குடியரசின் வர்த்தக, கைத்தொழில் மற்றும் வலுசக்தி அமைச்சரால் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள சந்திரிக்கா குளம் மற்றும் மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள கிரிஇப்பன் குளம் போன்ற நீர்த்தேக்கங்களின் மேற்பரப்பில் மிதக்கும் 01 மெகாவோற் இயலளவு கொண்ட சூரிய மின்கல மின்னுற்பத்தித் தொகுதி நிறுவுவதற்கான முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 6.83 பில்லியன் கொரியா வொன்களை வழங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டது. கொரிய குடியரசு சார்பில் இம்முன்னோடிக் கருத்திட்டத்தை கண்காணிக்கும் நிறுவனமாக Korea Institute for Advancement of Technology நிறுவனம் செயலாற்றும். அதற்கமைய எட்டப்பட்டுள்ள உடன்பாடுகளுக்கமைய, குறித்த முன்னோடிக் கருத்திட்டத்தை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதற்காக கொரிய குடியரசின் Korea Institute for Advancement of Technology நிறுவனம், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் இடையே கலந்துரையாடல் குறிப்பில் கையொப்ப மிடுவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்**

1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 1981.01.23 திகதிய அரச வர்த்தமானி இலக்கம் 125இல் வெளியிடப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் திருத்தப்பட்டு உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் 2311/39ஆம் இலக்க 2022.12.2 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதா உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இயலாமையுடன் கூடிய நபர்களின் உரிமைகள் தொடர்பான சட்டமூலம்**

இயலாமையுடன் கூடிய நபர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தில் இலங்கை அரசு 2016 ஆம் ஆண்டில் கையொப்பமிட்டுள்ளது. குறித்த சமவாயத்தின் 04ஆவது உறுப்புரைக்கமைய இயலாமைத்தன்மையை அடிப்படையாகக்கொண்டு எவ்வித பாகுபாடுகளின்றி சகல இயலாமையுடன் கூடிய நபர்களின் அனைத்துவித மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் போன்றவற்றை அரசு மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், அதுதொடர்பான அடிப்படைச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 1996ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க இயலாமையுடன் கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டத்தை முடிவுறுத்தி புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்தவும், மேற்படி குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப சட்டவரைபை அடிப்படையாகக்கொண்டு குறித்த கருமங்களுக்கான புதிய சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குவதற்காகவும், மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி, நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. 2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க ஹெலிகொப்டர் மூலம் ஏற்றிச் செல்லல் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

உள்ளூர் விமான சேவையின் பாதுகாப்புக்கு ஏற்புடையதான சட்ட வரையறைகளைப் புதுப்பித்தல், பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் உள்ளூர் விமான சேவைகளுக்கான பொறுப்பு வரையறைகளை அடையாளங் காண்பதற்காக 2018ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க ஹெலிகொப்டர் மூலம் ஏற்றிச் செல்லல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2022.08.22 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள ஹெலிகொப்டர் மூலம் ஏற்றிச் செல்லல் (திருத்தப்பட்ட) சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம்**

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2022.07.18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு சமர்ப்பித்த யோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 33 அதிகாரிகளுக்கு சம்பளத்துக்கு மேலதிகமாக ஒரு கோடி ரூபா கொடுப்பனவு

## தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தணிக்கை அறிக்கையில் தகவல்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 33 அதிகாரிகளுக்கு 2020ஆம் ஆண்டில் ஆறு தடவைகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக அவர்களின் நிரந்தர பதவி சம்பளத்துக்கு மேலதிகமாக கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளமை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, மேற்குறிப்பிட்ட தொகைக்கு மேலதிகமாக ஊழியர் சேமலாப நிதியத்துக்காக 14 இலட்சத்துக்கும் அதிகமான தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலச்சரிவு அபாயத்தைக் குறைப்பதற்கான ஆலோசனை ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குழுவிற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் குறித்த தொகை செலுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டு மண்சரிவு ஆய்வுக்காக பெறப்பட்ட 7 ஆயிரத்து 879 விண்ணப்பங்களில் 4 ஆயிரத்து 162 இடர் மதிப்பீட்டு அறிக்கைகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு அலுவலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்திடமிருந்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கிடைத்த 76 இலட்சம் ரூபாவும், திறைசேரியிலிருந்து பெறப்பட்ட 50 இலட்சம் ரூபாவுமாக ஒரு கோடியே 26 இலட்ச ரூபா 2020 டிசம்பர் 31ஆம் திகதிவரை பயன்படுத்தப்படவில்லை என கணக்காய்வு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# அரச சேவையிலுள்ள பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சை

## இம்மாதத்தில் நடத்த கல்வியமைச்சு தீர்மானம்

அரச சேவையிலுள்ள பட்டதாரிகளை ஆசிரியர்களாக பணியில் இணைத்துக்கொள் வதற்கான பரீட்சைகளை நடத்துவதற்கு பரீட்சை திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதுமுள்ள 341 பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் 25ஆம் திகதி இந்தப் பரீட்சை நடத்தப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகளுக்கு அனுப்புவதற்குத் தேவையான ஏற்பாடுகளை பரீட்சை திணைக்களம் செய்துள்ளது.

இந்தப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பத் தேவையான பட்டதாரிகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு, அதனடிப்படையில் ஆட்சேர்ப்பு நடத்தப்படுமென கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.03.13
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5058
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,998,841.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 3 7 3 8 6 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3300
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,471,208.80
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 04 21 64 65

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1513
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,614,682.80
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 8 9 7 5 0 0

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1088
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,620,510.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 05 06 46 81

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 367
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,193,030.80
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 12 14 23 31
விசேட இலக்கினம் தனுசு

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1406
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 307,512,018.00
ஆங்கில எழுத்து F
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 19 25 39 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00


# பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2023 மார்ச் மாதம் 18 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி**
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08



BIMPUTH

# பிம்புத் பினான்ஸ் பிஎல்சி

## 2021 மார்ச் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று

### வருமானக்கூற்று

ரூபா. '000

| | 31.03.2021 (கணக்காய்வுக்குட்பட்டது) | 31.03.2020 (கணக்காய்வுக்குட்பட்டது) |
|---|---|---|
| வட்டி வருமானம் | 720,920 | 1,530,738 |
| வட்டிச் செலவினங்கள் | (766,297) | (1,015,661) |
| **தேறிய வட்டி வருமானம்** | **(45,377)** | **515,077** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 15,713 | 111,984 |
| கட்டணம் மற்றும் தரகு செலவீனம் | | |
| **தேறிய கட்டண வருமானம்** | **15,713** | **111,984** |
| வியாபாரத்திலிருந்து தேறிய இலாபம் / (இழப்பு) | | |
| FVTPL விற்பனை சாதனங்களின் தேறிய இலாபம் / (இழப்பு) | (33,560) | 1,758 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 142,738 | 168,596 |
| முதலீட்டுச் சொத்துக்களின் நியாயமான மதிப்பில் மாற்றம் | 201,912 | |
| **ஏனைய தொழிற்பாட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய இலாபம்/(இழப்பு)** | **311,090** | **170,354** |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **281,426** | **797,415** |
| தனிப்பட்ட பெறுமானகுறைப்பு | | |
| திரண்ட பெறுமானகுறைப்பு | 38,255 | 466,415 |
| ஏனையவை | - | - |
| **கடன் மற்றும் ஏனைய இழப்புக்களில் பெறுமானகுறைப்பு** | **38,255** | **466,415** |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **243,172** | **331,000** |
| பணியாளர் செலவினங்கள் | 171,634 | 233,793 |
| தேய்மானம் | 105,239 | 92,734 |
| ஏனைய செலவீனங்கள் | 307,223 | 502,230 |
| **தொழிற்பாட்டு செலவினங்கள்** | 584,096 | 828,757 |
| **FSVAT முன் தொழிற்பாட்டு இலாம் / (இழப்பு)** | **(340,924)** | **(497,757)** |
| நிதிச் சேவைகள் மீது வரி | (9,626) | - |
| **FSVAT பின் தொழிற்பாட்டு இலாம் / (இழப்பு)** | **(350,550)** | **(497,757)** |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **(350,550)** | **(497,757)** |
| வருமான வரி செலவீனம் | | (22,371) |
| **காலத்திற்கான இலாபம்/நட்டம்** | **(350,550)** | **(520,128)** |
| **ஏனைய விரிவான இலாபம், தேறிய வருமா வரி** | | |
| துணை நிறுவனங்களின் ஏனைய விரிவான வருமானத்தின் பங்கு | | - |
| வரையறுக்கப்பட்ட நன்மை திட்டங்களில் உண்மையான ஆதாயம் | (366) | (3,515) |
| மறுமதிப்பீட்டு உபரியில் மாற்றங்கள் | 28,171 | - |
| **காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | **(322,745)** | **(523,643)** |
| **பங்கு ஒன்றிற்கான இலாபம்** | **(3.25)** | **(4.83)** |
| **மூலதன போதுமை** | | |
| அடிப்படை மூலதனம் ரூ. 000 | 310,119 | 539,828 |
| மொத்த மூலதன அடித்தளம் ரூ. 000 | 297,135 | 506,650 |
| அடிப்படை மூலதனம்-இடர் நிறையேற்றிய சொத்துக்கள் விகிதம் (குறைந்தபட்சம் 7.0%) | 4.85% | 6.05% |
| மொத்த மூலதனம்-இடர் நிறையேற்றிய சொத்துக்கள் விகிதம் (குறைந்தபட்சம் 11%) | 4.65% | 5.68% |
| மூலதன நிதி-மொத்த வைப்பு பொறுப்புகள் விகிதம் (குறைந்தபட்ச தேவை, 10%) | 33.65% | 46.23% |
| **சொத்துக்களின் தரம்** | | |
| மொத்த செயற்படாத ஒதுக்கீடுகள் ரூ. "000 | 1,398,127 | 1,489,952 |
| மொத்த செயற்படாத ஒதுக்கீடுகள் விகிதம் % | 33.82% | 23.30% |
| தேறிய செயற்படுத்தப்படாத வசதிகளுடன் விகிதம் % | 5.28% | 5.43% |
| **இலாபத்தன்மை (%)** | | |
| வட்டி எல்லை (தேறிய வட்டி இலாபம்/மொத்தச் சொத்து) | -0.76% | 6.43% |
| சொத்துக்கள் மீதான திரும்பல்கள் (வரிக்கு முன்னர்) | -5.86% | -6.21% |
| பங்குகள் மீதான திரும்பல்கள் (வரிக்கு பின்னர்) | -83.37% | -70.46% |
| **திரவத்தன்மை (ரூபா. 000)** | | |
| திரவச் சொத்துக்களின் ஆகக்குறைந்த தேவைப்பாடு | 194,371 | 161,714 |
| திரவச் சொத்துக்களின் கிடைபெறுமானம் | 421,065 | 762,625 |
| அரச பத்திரங்களின் ஆகக்குறைந்த தேவைப்பாடு | 175,443 | 137,540 |
| அரச பத்திரங்களின் கிடைப்பனவு | 132,689 | 324,855 |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 358 | 494 |
| கிளைகளின் எண்ணிக்கை | 19 | 19 |
| சேவை மையங்களின் எண்ணிக்கை | 28 | 28 |

### நிதி நிலைமை அறிக்கை

ரூபா. '000

| | 31.03.2021 (கணக்காய்வுக்குட்பட்டது) | 31.03.2020 (கணக்காய்வுக்குட்பட்டது) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 275,476 | 173,267 |
| நிதியியல் சாதனங்கள் இருப்பு | 130,606 | 396,343 |
| நிதி முதலீடுகள் - நியாய மதிப்பினூடாக இலாப நட்டம் | 106,108 | 145,493 |
| நிலைமாறக்கூடிய செலவில் கடன் பத்திரங்களில் | 132,689 | 324,855 |
| OCI மூலம் நியாயமான மதிப்பில் சமபங்கு சாதனங்கள் | 194 | 194 |
| நிதி முதலீடுகள் - கடன் மற்றும் பெறுகைகள் | 2,439,890 | 4,513,538 |
| கடன் மற்றும் பெறுகைகள் - குத்தகை | 514,445 | 535,439 |
| பெறக்கூடிய வரி | 110,630 | 132,914 |
| ஏனைய பெறுகைகள் | 126,231 | 218,918 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 1,769,396 | 1,146,881 |
| இருப்புக்கள் | - | - |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | 288,275 | 294,432 |
| பயன்பாட்டு சொத்துக்கள் | 69,850 | 109,453 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 17,789 | 22,904 |
| ஏனைய சொத்துக்கள் | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | **5,981,580** | **8,014,631** |
| **பொறுப்புக்கள்** | 4,114,648 | 4,159,667 |
| வங்கிக் கடன்கள் | 1,249,630 | 1,607,607 |
| வாடிக்கையாளர் கடன்கள் | - | 1,300,315 |
| ஏனைய கடன்கள் | - | - |
| வரி பொறுப்பு | 33,724 | 31,380 |
| ஓய்வு நலக் கடப்பாடுகள் | 89,727 | 103,442 |
| குத்தகை பொறுப்பு | 73,396 | 69,021 |
| ஏனைய பொறுப்பு | **5,561,126** | **7,271,432** |
| **பங்குதாரர் நிதி** | | |
| பிரேரிக்கப்பட்ட மூலதனம் | 616,100 | 616,100 |
| சட்டவொதுக்க நிதியம் | 71,842 | 71,842 |
| மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | 51,391 | 23,220 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | (318,879) | 32,037 |
| | **420,454** | **743,199** |
| **மொத்த பொறுப்புக்கள்** | **5,981,580** | **8,014,631** |
| **பங்கொன்றின் தேறிய சொத்து** | 3.90 | 6.90 |
| **தொடர்ச்சியான பொறுப்பு மற்றும் கடமைகள், ரூ. "000"** | 0 | 0 |

2011ஆம் ஆண்டின 42ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் கிழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையால் சான்றிதழ் அளிக்கப்பட்டது. (சான்றிதழ் இல. RFC/033) கூட்டிணைக்கப்பட்ட திகதி 27.07.2007 பிட்ச் ரேட்டிங் லங்காவின் நிரலிடப்பட்டது. "B-(lka)" 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க - குறைந்தபட்ச கோர் மூலதனத்தின் படி நிறுவனம் தேவையான முக்கிய மூலதனத்தை பூர்த்தி செய்யும் வரை ஆம் இலக்க 1.5 பில்லியன் இலங்கை மத்திய வங்கியால் வைக்கப்பட்டுள்ளது.

இங்கே கீழ் ஒப்பமிட்டுள்ள பிம்புத் பினான்ஸ் பிஎல்சி யின் பணிப்பாளர் மற்றும் நிதித் தலைவர்கள் ஆகிய நாம் இணைவாக சான்றுப்படுத்துவது யாதெனில்

(அ) மேலுள்ள கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட் பரிமாணத்துக்கும் வரையரைக்கும் அமைய தயாரிக்கப்பட்டது.

(ஆ) இக்கூற்றுக்களில் உள்ள தகவல்கள், கம்பனியின் கணக்காய்வு செய்யப்படாத கணக்கு அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையாகும் அவை கணக்காய்வு செய்தவை என குறிக்கப்படாவிடின்

**பணிப்பாளர்**
P.M.K. கமகே

**நிதித் தலைவர்**
M.N.H. நஷ்வாக்

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்



தலவாக்கலை ம.மா.நு/சென்கிளையார் தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் காலை 9.30மணியளவில் இடம்பெறவுள்ளது. தொடர்புகளுக்கு - 0766622050.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மஸ்கெலியா மொக்கா தோட்ட களஞ்சியசாலையில் ரூ.6 இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டு

## தோட்ட உதவி முகாமையாளர் மற்றும் களஞ்சிய பொறுப்பாளர் கைது

*(மஸ்கெலியா நிருபர்)*

ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உட்பட்ட மஸ்கெலியா மொக்கா தோட்ட உதவி முகாமையாளர் மற்றும் களஞ்சிய பொறுப்பாளர் ஆகியோர் 12ஆம் திகதி கைதுசெய்ய செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் (13) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில காலமாக மொக்கா தோட்ட களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த தேயிலைச் செடிகளுக்கு போடப்படவிருந்த உரம் மற்றும் கோதுமை மா ஆகியவை திருடு போயுள்ளதாக மொக்கா தோட்ட முகாமையாளர் புலத்சிங்கள முறைப்பாடளித்துள்ளார்.

இதுகுறித்து நடத்தப்பட்ட விசாரணையில் களஞ்சியசாலையில் எவ்விதமான உடைப்பும் இல்லாமல் திருட்டுப்போன நிலையில் உதவி முகாமையாளர் மற்றும் களஞ்சியசாலை பொறுப்பாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதுடன், நீதவான் சந்தேகநபர்களை (இன்று)15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பணித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

முறைப்பாட்டின்படி 23 மூட்டை உரம், 400 கிலோ கோதுமை மா மற்றும் 12.5 லீற்றர் திரவ உரம் ஆகியன திருடப்பட்டுள்ளதுடன் இவற்றின் பெறுமதி 6,31,088 ரூபா என தோட்ட முகாமையாளர் புலத்சிங்கள தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களை இலக்கு வைத்து, தொழிலாளர்களே இவ்வாறான திருட்டு சம்பத்தில் ஈடுபடுகின்றனர் என்ற போர்வையில் இதுவரைகாலம் அரங்கேறி வந்த மேற்படி திருட்டு சம்பவம், தோட்ட உதவி முகாமையாளர் மற்றும் களஞ்சியசாலை பொறுப்பாளர் ஆகியோரின் கைதுக்கு பின்னர் திருடர்கள் யார் என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

# தோழர் வெ.மகேந்திரனின் தந்தை காலமானார்



நுவரெலியா, இராகலையைச் சேர்ந்த புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் வெ.மகேந்திரனின் தந்தை மு.வெத்தலிங்கம் 78 வயதில் செவ்வாய்க்கிழமை(14) காலமானார்.

இறுதிக் கிரியைகள் இன்று (15) பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெறவுள்ளன.

# இரண்டுங் கெட்டான் நிலையில் பொதுமக்கள்



*(கண்டி நிருபர்)*

கண்டி- வத்துகாமம் பிரதான வீதியில் மடவளை நகரத்தில் பிரதான சந்தியில் காணப்படும் பஸ்தரிப்பு மற்றும் வடிகான் என்பவற்றை படத்தில் காண்கிறீர்கள்.

பாதை அபிவிருத்திப் பணிகள் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளதால் மேற்படி பஸ்தரிப்பில் பஸ்வண்டிகள் நிறுத்தப்பட்டால் பாதசாரிகளுக்கு அவ்விடத்தால் பயணிக்க முடியாதுள்ளது. அத்துடன்வடிகான் பஸ்தரிப்பில் முடிவடைவதால் மழைக்காலங்களில் பஸ்தரிப்பில் தரித்து நிற்க முடியாது சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

கடும் மழையின்போது பஸ்தரிப்பினுள் இருக்கவும் முடியாது, பாதை ஓரத்தில் நிற்கவும் முடியாது பொதுமக்கள் அசௌகரியப்படுகின்றனர்.

எனவே அவ்விடத்திலிருந்து பஸ்தரிப்பு மாற்றப்பட வேண்டும் அல்லது பாதை சீராக்கப்பட வேண்டும். இரண்டும் கெட்டான் நிலையில் பொதுமக்கள் உள்ளனர். அதிகாரிகள் இது விடயமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நோர்த் மாத்தளை லயன் வீடுகளுக்கு குடிநீர் வசதி



*(கண்டி நிருபர்)*

நோர்த் மாத்தளை பிரதேசத்திலுள்ள லயன் வீடுகளுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படவுள்ளது.

நோர்த் மாத்தளை பிரதேசத்திலுள்ள லயன் வீடுகளைச் சேர்ந்த 125இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அவதிப்பட்டு வந்த நிலையில், தற்போது அவர்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வசதியின்றி அவதிப்பட்ட நிலையில் அவர்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி பல வருடங்களாக ஏமாற்றியபோதும், அமைச்சர் ரோஹன திசாநாயக்க தான் வழங்கிய வாக்குறுதியை அவ்வாறே நிறைவேற்றியுள்ளதை அப்பிரதேச மக்கள் நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளனர்.



**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்திபெற்ற உக்குவள குரீவெல ஹமீதியா பாடசாலை மாணவர்களான எம்.கேசான் (144), எஸ்.அகீல் (145), எப். ருக்கைய்யா (149), ஆர். அபூபக்கர் (152), எப்.பிஸ்மா (158) ஆகியோர் இப்பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் விருதுகள் வழங்கி பாராட்டப்பட்டதுடன் பாடசாலை அதிபர் எம்.அஸ்லம், பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.உனைஸ் மற்றும் பிரமுகர்களுடன் காணப்படுகின்றனர்.**

# அளவத்துகொடை மர்மக் கொலை: மோப்ப நாய் உதவியுடன் இராணுவ சிப்பாய் கைது







*(கண்டி நிருபர்)*

மோப்ப நாயின் உதவியுடன் அளவத்துகொடை 25 வயது பெண்ணின் மர்ம மரணம் தொடர்பான சந்தேகத்தில் இராணுவ சிப்பாயொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெற் செடிகளின் உதவியுடன் 'ஏகல்' என்ற மோப்ப நாய் சந்தேகநபரை இனம் காட்டியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அளவத்துகொடைப் பொலிஸ் பிரிவில் 25 வயது பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலையில் அவரது சடலம் வயல்வெளியிலிருந்து கடந்த 11ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டது.

விலான, எல்லேகட பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய குறித்த பெண்ணின் கொலை தொடர்பில் துப்புத் துலக்க கண்டி அஸ்கிரிய மோப்பநாய் பயிற்சிப் பிரிவினரின் உதவி பெறப்பட்டது.


இதன்படி 'ஏகல்' மோப்பநாய் சுமார் 4 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்து சந்தேக நபரொருவரை அடையாளம் காட்டியுள்ளது. இதற்கு உதவியாக மோப்ப நாயிக்கு மேற்படி பெண் கொலைசெய்யப்பட்ட இடத்திலுள்ள நெற்பயிர்களை மோப்பம் பிடிக்க வழங்கப்பட்டுள்ளது. அதன்படியே அது இராணுவ வீரரொருவரை அடையாளம் காட்டியுள்ளது. இதனையடுத்து சந்தேக நபரான இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளதாக அளவத்துகொடை பொலிஸார் தெரிவித்தனர்.



**கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய, உயர்தரத்தில் கல்வியைத் தொடர்கின்ற மற்றும் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையங்களின் ஊடாக அவரவரின் திறமைக்கேற்ப தொழிற்பயிற்சிகளை வழங்கும் விசேட செயற்றிட்டமொன்று கடந்த சனிக்கிழமை பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் உரையாற்றுவதையும், சரஸ்வதி தேசிய பாடசாலையின் அதிபர் திருலோகங்கர் உரையாற்றுவதையும், வளவாளர்களான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன், ஆசிரியர் ஆலோசகர் எஸ். பிரபாகரன், பதுளை தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) தொழில் ஆலோசகர் ஏ.கே.எல். சத்துரங்க, பதுளை தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் (TEC) ஆலோசனை அதிகாரி சாமிக்க சுரங்க ஆகியோர்கள் மாணவர்களுக்கு தெளிவுப்படுத்துவதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.**

# யாழ். நாகர் கோவிலில் துப்பாக்கிச்சூடு; ஆலய சப்பர கொட்டகைக்கும் தீ வைப்பு!





*(யாழ். நிருபர்)*

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் பொலிஸாருக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு துப்பாக்கிச்சூட்டில் முடிவடைந்தது.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு அப்பகுதிகளில் துப்பாக்கி சன்னங்களின் வெற்றுக்கோதுகள் காணப்படுகின்றபோதிலும், பொலிஸார் தாம் துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை என தெரிவித்துள்ளனர்.

அவ்வாறாயின், யார் துப்பாக்கிச்சூடு நடத்தியது எனவும் பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரை விட வேறு நபர்களிடம் துப்பாக்கி உள்ளனவா என்ற சந்தேகமும் எழுந்துள்ளதாகவும், அதனால் தாம் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, அப்பகுதியிலுள்ள முருகமூர்த்தி ஆலய சப்பர கொட்டகைக்கு தீ வைக்கப்பட்டதில் கொட்டகை முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நாகர்கோவில் பகுதியில் மயானம் ஒன்றைச் சுற்றி மதில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று (14) செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதில் கட்டுவது தொடர்பில் இரு தரப்பினருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டு, மதில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த புலம்பெயர்ந்து வாழும் நபர் ஒருவர் மீது ஊரில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு விசாரணைக்காக சென்ற பொலிஸ் குழுவினருக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது பொலிஸார், பெண்கள், சிறுவர்கள் என பேதம் பார்க்காமல் அனைவர் மீதும் கடுமையான தடியடி மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. துப்பாக்கிச் சூடுகளும் நடத்தப்பட்டுள்ளன. ஆனால் தாம் துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை என பொலிஸ் தரப்பு மறுத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக நேற்று செவ்வாய்க்கிழமை மயான மதில் அமைப்பதில் முரண்பட்ட தரப்பினரை பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸார் அழைத்துள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழில் ஐந்து இளைஞர்கள் கைது

*(யாழ். நிருபர்)*



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 5 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிட மிருந்து, இரண்டு வாள்கள் மற்றும் களவாடப்பட்ட மூன்று மோட்டார்சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபர்கள் மோட்டார்சைக்கிள்களை களவாடி, அவற்றுக்கு போலி இலக்கத் தகடுகளைப் பொருத்தி வன்முறைச் சம்பவங்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதேவேளை, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் காரைநகர்ப் பகுதியிலுள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டு வீட்டிற்கு தீ வைத்து ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் நாசமாக்கப்பட்ட சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பு உள்ளதாகவும், நாவற்குழி பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாகவும் பொலிஸ் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் நவாலி, மானிப்பாய், காரைநகர் மற்றும் கிளிநொச்சி விசுவமடு பகுதிகளைச் சேர்ந்த 24 வயது தொடக்கம் 26 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பெயர் மாற்றம்

கற்பிட்டி- பள்ளிவாசல்துறை, முசல்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் ''மாரசிங்க தொன் இந்திராணி'' ஆகிய நான் கடந்து 1991 ஆம் ஆண்டுமுதல் இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை ''அப்துல்லாஹ் பாத்திமா றிஸானா'' (ABDULLAH FATHIMA RISANA) என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**- அப்துல்லாஹ பாத்திமா றிஸானா**

# அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் யாழ். செயலருக்கு மகஜர் கையளிப்பு



*(யாழ். நிருபர்)*

உள்ளூர் இழுவைப் படகினால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மகஜரொன்றை கையளித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு சென்ற அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ்.ஜோன் பொஸ்கோ, செயலாளர் வே.வின்சன், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளர் அ.அன்னராசா ஆகியோர் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரனை சந்தித்து மகஜரை கையளித்தனர்.

அந்த மகஜரில் குருநகர் பகுதியைச் சேர்ந்த உள்ளூர் இழுவைமடி தொழிலாளர்களால் உள்ளூர் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

# கொண்டாட்டத்தினுள்ளும் பொறுப்புடன் நடந்த சாரணர்கள்: யாழ். சென். ஜோன்ஸ் மாணவர்களின் முன்மாதிரிக்குக் குவியும் பாராட்டுகள்



*(யாழ். நிருபர்)*

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் பேரணியின்போது, மாணவர்களின் முன்னோடியான செயற்பாடுகள் பலராலும் பாராட்டுக்குள்ளாகியுள்ளது.

அண்ணளவாக 2000 பேருக்கும் மேல் பங்குபற்றிய இந்த விழிப்புணர்வு நடைபவனியில் கலந்துகொண்ட சில சாரணச் சிறார்கள், பேரணி சென்ற வீதிகளின் இரு மருங்கிலும் காணப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் கழிவுப் பொருட்களை சேகரித்த வண்ணம் தங்களை அறியாது இந்நடைபவனிக்கு புதியதோர் கோணத்தில் வலுச்சேர்த்திருக்கின்றார்கள். மாணவர்களின் இந்த முன்னோடியான செயற்பட்டைப் பார்த்த பலரும் பாராட்டத் தவறவில்லை.

அரசியல் பேரணிகள் மற்றும் போராட்டங்களின்போது, தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் அவர்களால் வீசப்படும் கழிவுகள், அவற்றால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றி பெரியவர்களே சிந்திக்கத் தவறும்போது, பாரம்பரியமிக்க பண்பாட்டில் மலர்ந்த இந்தச் சிறுவர்களின் முன்மாதிரிக்குத் தலை வணங்கியே ஆகவேண்டும்.

# மருத்துவ மாணவர்களின் மருத்துவப் பயிற்சி தொடர்பில் ஜனாதிபதியினால் குழு நியமனம்

அரச பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் மருத்துவப் பயிற்சிக்கு இடையூறு ஏற்படாத வகையில், ஏனைய பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவப் பயிற்சிகளை வழங்குவதற்காக, போதனா வைத்தியசாலைகளாக பயன்படுத்துவதற்குப் பொருத்தமான அரச வைத்தியசாலைகளை இனங்காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொலவின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில் ஏனைய உறுப்பினர்களாக, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் ஆர்.எம்.சமன் குசும்சிறி ரத்நாயக்க, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (மருத்துவ சேவைகள்) வைத்தியர் ஏ.கே.எஸ்.டி.அல்விஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, சிரேஷ்ட சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் பேராசிரியர் மொஹான் டி சில்வா, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சத்திரசிகிச்சை கற்கைகள் பேராசிரியர் பவந்த கமகே, சிரேஷ்ட எலும்பியல் மற்றும் ஆர்த்தோபெடிக்ஸ் கலாநிதி நரேந்திர பின்டோ, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் நாமல் விஜேசிங்க, இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் வஜிர திஸாநாயக்க, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் தர்ஷன சிறிசேன, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் ஜே.பலவர்தன, சுகாதார அமைச்சின் தாதியர் பணிப்பாளர் (மருத்துவ சேவைகள்) ஆர்.எல்.எஸ்.சமன்மலி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வைத்தியர் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை, லைசியம் கெம்பஸ் மற்றும் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, குருநாகல், பொலன்னறுவை ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மருத்துவ மாணவர்களுக்காக போதனா வைத்தியசாலையாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற அரச வைத்தியசாலைகள், ஆய்வுசெய்தல், மீளாய்வு செய்தல், இனங்காணல் மற்றும் மருத்துவப் பயிற்சியை வழங்குவதற்கு உள்ள சாத்தியக்கூறுகள் என்பன தொடர்பில் இக்குழு ஆராயும்.

இதன்படி, இனங்காணப்படும் வைத்திய சாலைகளை அபிவிருத்திசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் என்பதுடன், எட்டு (08) வாரங்களுக்குள் குழுவின் இணங்காணல் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் இக்குழுவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# மருதனார்மடம் – உடுவில் வீதியில் கனரக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பிரதேச மக்கள் பெரும் அவதி!

## யாழ். வலி. தெற்கு பிரதேச சபை பராமுகம்





யாழ்ப்பாணத்தில் காலைவேளையில் பெருமளவு மக்களும் மாணவர்களும் பயணிக்கும் முக்கியமான வீதியான மருதனார்மடம் - உடுவில் வீதியில் கனரக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர்.

மருதனார்மடம் சந்தைக்கு முன்பாக வாகனங்கள் நிறுத்தத் தடை என வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் அறிவித்தல் பலகை போடப்பட்ட இடத்தில் மணல் ரிப்பர் உள்ளிட்ட கனரக வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

ஆரம்பத்தில் வீதியின் ஒருபக்கத்தில் மட்டும் நிறுத்தப்பட்ட வாகனங்கள் தற்போது இருபக்கமும் நிறத்தப்படுகின்றன.

இதனால் உடுவில் மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, பல்கலைக்கழக நுண்கலை துறை, இணுவில் இந்துக் கல்லூரி செல்லும் மாணவர்களும் மருதனார்மடம் சந்தை வியாபாரிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் அண்மைக்காலத்தில் விபத்துகள் பல இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, இங்கு தரித்துநிற்கும் மணல் ரிப்பர்கள் மாணவர்கள் பாடசாலை செல்லும் நெரிசல் நிறைந்த நேரத்தில் வீதியில் பயணம் செய்வதால் மாணவர்களும் பெற்றோர்களும் மிகுந்த ஆபத்துடன் பயணிக்கவேண்டியுள்ளது. அறிவித்தல் பலகையை மட்டும் நாட்டிவிட்டு பிரதேச சபை மௌனம் காப்பது ஏன் என அங்கிருந்த சிலர் கேள்வி எழுப்பினர்.

# வல்வெட்டித்துறையில் மோட்டார்குண்டு மீட்பு

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதி ஒன்றிலுள்ள தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றில் மோட்டார் குண்டு ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

அதனையடுத்து வல்வெட்டித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.



நீதிமன்றத்தின் அனுமதியைப்பெற்று அந்த குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு மேலும் ஆறாயிரம் ஆசிரியர்கள் பற்றாக்குறை

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக மேலும் 6000 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதிப்பீட்டுக் கடமைகளுக்காக இதுவரை சுமார் 13,000 விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டார்.

விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 19 ஆயிரம் ஆசிரியர்கள் தேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முக்கியமாக விஞ்ஞானப் பாடப் பிரிவின் மதிப்பீட்டுப் பணிகளுக்கே ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக விண்ணப்பங்களை அனுப்புவதற்கு மேலும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கால அவகாசம் எதிர்வரும் 8ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில், தற்போதைய சூழலை கருத்திற்கொண்டு குறித்த கால அவகாசம் காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கைதான சந்தேகநபர் தப்பிச்சென்ற சம்பவம்

## தப்பிச்செல்ல உதவிய மேலும் நால்வர் கைது

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பில் மேலும் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் நபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கடந்த 24ஆம் திகதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது தப்பிச்சென்றுள்ளார்.

குறித்த நபர் தப்பச்செல்ல தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை, உணவு பான வசதிகளை வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டின்பேரில் குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் கட்டுவெல்லேகம, நீர்கொழும்பு மற்றும் மினுவாங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இது தவிர, சந்தேகநபர்கள் பயன்படுத்திய 02 கார்களும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

# மண் அகழ்வு குறித்து நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு




வலி. வடக்கு வறுத்தலைவிளான் பிள்ளையார் குளத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடானது வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பிரபாகரனால் வழங்கப்பட்ட நிலையில், முறைப்பாட்டில் பின்வரும் விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பிள்ளையார் குளத்திலிருந்து சுமார் 150 லோட் மணலை வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் அனுமதித்ததாக தெரிவித்து தனியார் ஒருவர் ஏற்றி விற்பனை செய்துள்ளார்.

இவ்வாறு மணல் ஏற்றும் சந்தர்ப்பத்தில் கிராம சேவையாளர் ஊடாக தெல்லிப்பழை பிரதேச செயலாளருக்கு அறிவித்த நிலையில் அங்கு நின்ற ரிப்பர் வாகனத்தையும் மணல் ஏற்றியவர்களையும் பொலிஸாரிடம் பிரதேச செயலாளர் ஒப்படைக்கவில்லை.

மேலும் பிள்ளையார் குளத்தில் சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம்பெறுவதாக காங்கேசன்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காமை போன்ற விடயங்களை முன்வைத்து சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வண்ணத்தியாறு பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்

## தோட்டச் செய்கை - தென்னைச் செய்கை அழிப்பு!





புளியம்பொக்கணை வண்ணத்தியாறு பகுதியில் காட்டு யானைகளால் தோட்டச் செய்கை மற்றும் தென்னைச் செய்கை அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கணை கிராம அலுவலர் பிரிவிலுள்ள வண்ணாத்தியாறு பகுதியில் தொடர்ச்சியாக ஒரு மாத காலமாக காட்டு யானைகள் தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் தென்னைச்செய்கை என்பவற்றை அழித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகளிலிருந்து எம்மையும் எமது வாழ்வாதாரத்தையும் காப்பாற்றுவதற்கு எவரும் முன்வரவில்லை என வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தெரிவித்தபோதிலும் உடன் சம்பவ இடத்திற்கு வருவதாகக் கூறிவிட்டு, பின்னர் தொலைபேசியையும் துண்டித்துவிட்டதாகவும், மீண்டும் தொடர்பை ஏற்படுத்தியபோதிலும் எந்த பயனுமற்று போயுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் நேற்றைய தினம் இரவு 1.30 மணியளவில் குறித்த பகுதியில் ஒன்றரை ஏக்கர் அளவில் தென்னைச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மூன்று நான்கு வருடம் கடந்த நிலையிலுள்ள 22 தென்னை மரங்களை முற்றுமுழுதாக அழித்ததுடன், சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டிருந்த பகுதிகளிலும் அழிவை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் அப்பகுதியிலிருந்து அதிகாலையில் தமது உற்பத்திகளை சந்தை பகுதிக்கு கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அப்பகுதி ஊடாக சுண்டிக்குளம் கடற்கரைக்கு நாளாந்த மீன் கொள்வனவுக்காக செல்லும் வியாபாரிகளும் காட்டு யானைகளின் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதேஇப்பகுதி மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

# பெண் வைத்தியரான மனைவி மீது கத்திக்குத்து

கொழும்பு டி சொய்சா வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் வைத்தியர் ஒருவரை அவரது கணவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதையடுத்து, பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக கம்பஹா, நுங்கமுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

படுகாயமடைந்த வைத்தியர் ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வைத்தியரை கத்தியால் வெட்டி காயப்படுத்தியதாகக் கூறப்படும் வைத்தியரின் கணவர், கம்பஹா மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரொருவர் என பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் வைத்தியரின் முதுகு மற்றும் கைகளில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வைத்தியரின் கையடக்கத் தொலைபேசியில் காணப்பட்ட தொலைபேசி இலக்கமொன்று தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதையடுத்து சந்தேகநபரான கணவர் கத்தியால் வெட்டி, அவரைக் காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

# நான்காவது அகவையில் கால் பதிக்கும் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு




இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் 4ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 7.00 மணிக்கு சூரியகந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூஜையைத் தொடர்ந்து ஆரம்பாகும் இந்நிகழ்வில் காலை 8.30 மணிக்கு இ/எம்.பி. எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் இ/எம்.பி. ஹேய்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு இடம்பெறும்.

மாலை 3 மணிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு சூரியகந்தையில் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலைவேளையில் மலையக இளைஞர் – யுவதிகளின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் சிசில்டன் தோட்ட இளைஞர்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இடம்பெறும்.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு விழாக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(தகவல் - யதுஷா ரவித்தியாகராஜா)

# இவ்வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் 8 ஆயிரத்து 422 கைபேசிகள் திருட்டு

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் இலங்கையில் 8,422 கைபேசிகள் (ஸ்மார்ட்போன்கள்) திருடப்பட்டுள்ளன அல்லது தொலைந்து போயுள்ளதாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) தெரிவித்துள்ளது.

தொலைந்த தொலைபேசிகளை மீட்பதற்காக இலங்கை பொலிஸார் 2018 டிசம்பர் 31ஆம் திகதிமுதல் நிகழ்நிலை (ஒன்லைன்) முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதன்மூலம் தமக்கு மொத்தமாக ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 451 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, 2019ஆம் ஆண்டில், 40 ஆயிரத்து 167 கைபேசிகளும் 2020ஆம் ஆண்டில் 12 ஆயிரத்து 567 கைபேசிகளும், 2021ஆம் ஆண்டில் 27 ஆயிரத்து 933 கைபேசிகளும் திருடப்பட்டுள்ளன அல்லது தொலைந்துபோயுள்ளன.

தொலைந்துபோன தொலைபேசி கள் குறித்து தமக்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள், உரிய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் (பொது முறைப்பாடுகள்) மேனகா பத்திரன ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.









உடப்பு கடற்றொழிலாளர்கள் யாவரும் ஒன்றிணைந்து உடப்பு ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் கோவில் அருகிலுள்ள சமுத்திரத்தில் பாலாபிஷேகம் ஒன்றை செவ்வாய்க்கிழமை (14) செய்தார்கள். அபிஷேகம் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. (உடப்பு செய்தியாளர்)

# கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் விசேட சந்திப்பு





(கிண்ணியா செய்தியாளர், அப்துல் சலாம்யாசிம்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் காலீத் நாஸர் சுலைமான் அல் அமீரி ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று திங்கட்கிழமை(13) மாலை திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள முதலீட்டாளர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் புதிய முதலீட்டு வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவதற்கான நிரந்தர வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் கிளையொன்றை நிறுவி ஐக்கிய அரபு இராச்சியத்தின் முதலீட்டாளர்களுக்குத் தெரியப்படுத்தி புதிய முறைமை ஒன்றை ஏற்படுத்துமாறும் தூதுவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், சுற்றுலா மற்றும் இயற்கை விவசாயம் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் வகையில் அந்தத் திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சுற்றுலா வலயங்களில் புதிய விளம்பரத் திட்டங்களை முன்னெடுக்குமாறும் தூதுவர் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தார். இந்தத் தகவலை மிக விரைவாக தெரியப்படுத்த அரசாங்கம் செயல்பட்டு வருவதாக ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், 2030ஆம் ஆண்டளவில் நாட்டின் மற்றும் உலகின் மிக மதிப்புமிக்க கடல் பகுதிகளில் 10 மில்லியன் சதுப்புநில தாவரங்களை வளர்ப்பதற்கான ஒரு சிறந்த திட்டத்தை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. அந்தத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் கடல் பகுதியும் உள்ளடங்கும். திருகோணமலை சுற்றுலாப் பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளுக்காக சுப்பர் மார்க்கெட் மற்றும் சொகுசு ஹோட்டல்கள் தேவைப்படுவதால், முதலீட்டாளர் ஒருவரை தொடர்புகொள்ளுமாறும் ஆளுநர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

குறித்த சந்திப்பின் இறுதியில் தூதுவருக்கும் ஆளுநருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்ட அதேவேளை, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநரின் உதவி செயலாளர் ஏ.ஜி.தேவேந்திரன் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# 'கையில் இருப்பது சமூக ஊடகங்கள் அல்ல: சமூகப் பொறுப்பு'

## மட்டக்களப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு









(கல்லடி செய்தியாளர், மட்டக்களப்பு)

மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் சமூக ஊடகப் பாவனைகள் அதிகரித்து வருகின்ற இக்காலகட்டத்தில், அதனை சரியான முறையிலும், பாதுகாப்பாகவும் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்று மட்டக்களப்பில் இயங்கிவரும் LIFT தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்காக மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களை வளவாளர்களாகக்கொண்டு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் ஒரு கட்டமாக மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக்கல்லூரி, ஆரையம்பதி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இரண்டு நாட்களைக்கொண்ட கருத்தரங்குகள் இடம்பெற்றன.

கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் அதில் காணப்படும் சட்ட வரம்புகள், ஊடக தர்மம், ஊடக நெறிமுறைகள் போன்ற பல்வேறு விடயங்களில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இதற்கான வளவாளர்களாக ஊடகவியலாளர்களும் சமூக செயற்பாட்டாளர்களுமான ருக்சிகா மயூரன், பேரின்பராஜா சபேஷ், மு.பாரிஸ், உதயகுமார் உதயகாந்த், குழந்தைவடிவேல் ஜெயச்சந்திரிகா, சஜீத் அஹமட் ஆகியோர் செயற்பட்டதோடு LIFT நிறுவன உத்தியோகத்தர்களான சுதன், கண்ணன், விதுஷா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்திற்கான நிதியுதவியை HELVETAS நிறுவனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இந்த மூன்று செயலமர்வுகளிலும் மொத்தமாக 92 மாணவர்கள் பயனடைந்துள்ளதுடன், மாவட்ட ஊடகப்பிரிவுடன் இணைந்து செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தின் மூலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக 900 மாணவர்கள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வடக்கு, கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை மீண்டும் புனரமைக்கப்பட்டு, தற்காலிக நிர்வாகத் தெரிவு ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்றது. சங்கத்தின் செயற்பாடுகளை சர்வதேசத்தோடு இணைந்து வினைத்திறனாக முன்னெடுக்கும் நோக்கில் இடம்பெற்ற நிர்வாகத் தெரிவின்போது, தலைவியாக மீண்டும் அ.அமலநாயகி தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக சுகந்தியும், பொருளாளராக பவானியும் தெரிவுசெய்யப்பட்டதுடன், 11 பிரதேச செயலகப் பிரிவுக்கும் ஒவ்வொரு தலைவியும் தெரிவுசெய்யப்பட்டனர். (கல்லடி செய்தியாளர்)

# பாலியல் ஆரோக்கியம் மற்றும் தொற்று நோய்கள் பிரிவின் வருடாந்த ஒன்றுகூடல்



(நிந்தவூர் செய்தியாளர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்றுநோய்கள் பிரிவின் ஏற்பாட்டில் வருடாந்த ஒன்றுகூடலும் பிரியாவிடை நிகழ்வும் அண்மையில் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.என்.எம்.தில்ஷான் தலைமையில் சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில், பிரதி பிராந்திய சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித், திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஸி.எம்.மாஹிர் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்துகொண்டனர்.

கடந்த ஆண்டு கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் பிரிவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக ஓய்வின் பின்னரும் இணைந்து பணியாற்றி சேவைகள் புரிந்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஓய்வுபெற்ற பிராந்திய சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.ஏ.ஜெளபருக்கான பிரியாவிடை நிகழ்வும் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடியில் SMART CITY திட்டம் அறிமுகம்







(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி நகர சபை எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களுக்கான சேவைகளை இலகுவாகவும் விரைவாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் வழங்கும் நோக்கில் SMART CITY எனும் விசேடத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (14) காத்தான்குடி பீச் வே மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன், நகர சபை உறுப்பினர்கள் மற்றும் UNDP பிரதிநிதிகள், பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

காத்தான்குடி நகரசபை பொதுமக்களுக்கு வழங்கும் அனைத்து சேவைகளையும் டிஜிட்டல் முறையில் உலகில் எப்பாகத்தில் இருந்துகொண்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் காத்தான்குடி நகரசபையின் SMART CITY மென்பொருளை win soft max (pvt Ltd) நிறுவனத்தினர் காத்தான்குடி நகரசபையுடன் இணைந்து வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு தேசிய ரீதியில் வரலாற்றுச் சாதனையை முதல்தடவையாக பெற்றுக்கொடுத்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (12) மட்டக்களப்பில் இடம்பெற்றது. மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் ந.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். (மட்டக்களப்பு)

# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(மாவடிப்பள்ளி செய்தியாளர்,எஸ்.அஷ்ரப்கான்)



சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்றது. ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேசத்தின் முக்கிய பிரச்சினைகள் குறித்தும் கடந்த மற்றும் நிகழ்கால அபிவிருத்தித்திட்டங்கள், உணவு வங்கி செயல்முறை தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எம்.அஸ்மி, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முஆப்பிகா, கணக்காளர் நுஸ்ரத் பானு, சாய்ந்தமருது பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஹிபதுல் கரீம், கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# பெண் போராளி வெளிநாடு செல்ல உதவிய கான்ஸ்டபிள் ஒருவர் கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் பெண் போராளி ஒருவர் போலி ஆவணங்களுடன் வெளிநாடு செல்வதற்கு உதவிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த முன்னாள் பெண் போராளி, வெள்ளவத்தையிலுள்ள முகவரிக்கு போலி ஆவணங்களைத் தயாரித்து வெளிநாடு செல்வதற்கு சந்தேகநபரான கான்ஸ்டபிள் உடந்தையாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்து நாட்டிற்கு வந்தபோது கைதுசெய்யப்பட்ட குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகத்திற்குரிய கான்ஸ்டபிள் கெசல்வத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர் என தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

ஜிசேர்ப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஹெல்விடாஸ் நிறுவனத்தின் இணை அனுசரணையுடன் சமாதானமும் சமூகப்பணியும் அமைப்பு அமுல்படுத்திவரும் வை-சென்ச் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பிரதேச நல்லிணக்கக் குழு உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் நல்லிணக்க விழிப்புணர்வு வீதி நாடகம் பதியதலாவ பிரதான பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது. வன்முறையற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்குடனும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை வெளிக்கொணரும் அடிப்படையிலும் இந்த வீதி நாடகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(கல்முனை செய்தியாளர்)





2022ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது அல்-கமறூன் வித்தியாலய மாணவி ஹிபா பானு சிறந்த புள்ளிகளைப்பெற்று சிறப்பு சித்தியடைந்தமைக்காக ஹியாகான் பௌண்டேசன் தலைவரும் மு.கா. பதில் பொருளாளருமான ஏ.சி.யஹியாகான் தனது துணைவியார் சகிதம் மாணவியின் வீடு தேடிச் சென்று பாராட்டி பரிசில் வழங்கி கௌரவித்தார். அருகில் மாணவியின் பெற்றோர் இருப்பதைக் காணலாம்.

# இளைஞர், யுவதிகளுக்கான 2ஆம் கட்ட தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை









'தன்னம்பிக்கையுள்ள எதிர்கால இளைஞர், யுவதிகளை உருவாக்கல்' எனும் தொனிப் பொருளை அடிப்படையாகக்கொண்டு சனிக்கிழமை 11ஆம் திகதி வாழைச்சேனை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தினால் இளைஞர், யுவதிகளுக்கான தன்னம்பிக்கை வலுவூட்டல் பயிற்சி ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. மனித மேம்பாட்டு அமைப்பின் ஸ்தாபகர் எஸ்.ஏ.எம்.அஸ்லமின் வழிகாட்டலில் அமைப்பின் ஓட்டமாவடி பிரதேச பெண் அமைப்பாளரான எஸ்.எவ்.ஹானி, பிரதேச பெண் ஒருங்கிணைப்பாளர் எஸ்.எவ்.ஷிமானி ஆகியோரின் ஏற்பாட்டில் வாழைச்சேனை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி லெப்டினட் கேர்ணல் ரவூப் தலைமையில் பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டன.

மேலும், இந்நிகழ்வின் வளவாளராக மேஜர் தமீமினால் இளைஞர், யுவதிகளுக்கான விரிவுரைகளும் பயிற்சிகளும் களச்செயற்பாடுகளும் நடத்தப்பட்டன. இப்பயிற்சிப்பட்டறையில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டதுடன் அவர்களுக்கு பயிற்சி நிறைவு நாளன்று சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# யுத்தத்தினை விட வீதி விபத்துகளே பயங்கரமானவை!

## 24ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கல்முனையில் தெரிவிப்பு

(மீனோடைக்கட்டு செய்தியாளர்)



தற்போது வீதி விபத்துகள் அதிகமாக இடம்பெறுவதனால், இளைஞர்கள் விபத்துகள் குறித்து மிகவும் கரிசனையாக செயல்பட வேண்டுமென இலங்கை இராணுவ 24ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறி தெரிவித்தார்.

கல்முனையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் 18ஆவது விஜயபாகு காலாட்படையணி முகாமில் கட்டளை அதிகாரி மேஜர் உதித்த கலுஆராச்சி தலைமையில் சனிக்கிழமை (11) நடைபெற்ற இளைஞர் தன்னார்வ அணியின் அங்கத்தவர்களுக்கான தலைமைத்துவ வழிகாட்டல் செயலமர்வில் பிரதம வளவாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது அதிக வீதி விபத்துகளில் இளைஞர் சமூகம் பாதிக்கப்பட்டு வருவது மனவேதனை தருகின்றது. குறிப்பாக, தற்போதைய சாரதிகளிடம் சுய ஒழுக்கம் இல்லாத காரணமே இதற்கான பிரதான காரணமாக அமைகின்றது. ஒருவரை ஒருவர் முந்திச்சொல்ல வேண்டும், வாகனங்கள் ஓட்டுவதில் தங்களது வீரத்தினை நிரூபிக்க வேண்டும் என்ற நப்பாசையினால், இவ்வாறான விபத்துகள் ஏற்படுவதுடன், யுத்தத்தினை விட வீதி விபத்துகளே மிகப் பயங்கரமானவையாகக் காணப்படுகின்றன.

கடந்த 13 வருடத்திற்குள் நாட்டில் 68 ஆயிரம் பேர் வீதி விபத்தினால் இறந்துள்ளதுடன், ஒரு ஆண்டுக்கு சராசரியாக 03 இலட்சம் பேர் பாதிக்கப்படுவதுடன் ஒரு நாளைக்கு சராசரியாக 10 பேர் இந்த வீதி விபத்தினால் பாதிக்கப்பட்டு, அதிலும் சில பேர் மரணத்தினை தழுவுகின்றனர். இவ்வாறான நிலை எதிர்காலத்தில் மாற்றமடைய வேண்டும். இதற்கு இளைஞர்கள் ஒவ்வொருவரும் முன்வந்து, வாகனங்களை செலுத்தும்போது கவனமாக செல்ல வேண்டும்.

மேலும், இளைஞர்கள் பலரும் போதைக்கு அடிமையாகி வருகின்றனர். இந்த விடயத்தில் போதைப்பொருளானது ஒரு சங்கிலித் தொடராக தற்போது உருவெடுத்து வருகின்றது. இதில் முதலீட்டாளர்கள், இறக்குமதி செய்வோர், விநியோகஸ்தர்கள், பாவனையாளர்கள் என நான்கு தரப்பினர் காணப்படுகின்றனர். அவர்களை இனங்கண்டு பாதுகாப்புத்துறைக்கு அறிவிக்க வேண்டும். இதனை இளைஞர்கள் சிந்திக்காத வரை போதையினை ஒழிக்க முடியாது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் போதைக்கு துணையாய் இருந்த ஒன்பது இராணுவ வீரர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இலங்கை இராணுவம் என்பது ஒழுக்கம் நிறைந்த ஒரு படையாகும். அந்தப் படையானது மக்கள் மத்தியில் நன்மதிப்பினைப் பெற்று தொடர்ந்தும் நம்பிக்கையாகத் திகழும் என்றார்.

நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு முன்னால் அமையப்பெற்றுள்ள இராணுவ முகாமினை, பிறிதொரு இடத்திற்கு இடமாற்ற இளைஞர் தன்னார்வ அணியின் செயற்பாட்டாளரும் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளர் சபை உறுப்பினருமான சுலைமான் நாஸிறூனினால் படைத்தளபதியிடம் யோசனை முன்வைக்கப்பட்டு, சாதகமான தீர்வினை வழங்கவுள்ளதாக படைத்தளபதி உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் நிந்தவூர் இளைஞர் சேவை அதிகாரி எம்.ஐ.எம்.பரீட் மற்றும் இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை மாநகர சபை நிதி மோசடியாளர்களை சட்டத்தின்முன் நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம்









(எஸ்.அஷ்ரப்கான், பாறுக் ஷிஹான், மருதமுனை செய்தியாளர்)

கல்முனை மாநகர சபையில் வரிப்பண மோசடியாளர்களை இனங்கண்டு, சட்டத்தின் முன் நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று திங்கட்கிழமை (13) மாலை கல்முனை பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, பல்வேறுபட்ட ஊழல்களை செய்த கல்முனை மாநகர ஊழியர்கள் உட்பட இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த முதல்வர், கணக்காளர் என பல்வேறு தரப்பினரையும் மக்கள் மன்றுக்கு கொண்டுவர வேண்டுமெனக்கோரியும் மின்சாரக் கட்டணம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, தேர்தலை பிற்போடல், நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டல் தொடர்பாகவும் எனபல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். தேசிய மக்கள் சக்தியின் கல்முனைபிராந்திய இணைப்பாளர் ஏ.ஆதம்பாவா தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்த குறித்த ஆர்ப்பாட் டத்தின்போது பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதாவுல்லா எம்.பி. தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையில் திங்கட்கிழமை (13) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஷாரின் (நளீமி) ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக கேட்போர் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர், பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட மாநகர மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்குக் காத்திரமான தீர்வுகள் எட்டப்பட்டன. அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் காணப்படும் பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துறைசார் அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு அக்குழு விரைவில் கூடி பிரச்சினைகளை ஆராய்ந்து நிரந்தரமான தீர்வு ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துதல் எனத் தீர்மானிக்கப்பட்டது.

வெள்ள அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு வழிமுறைகள் இனங் காணப்படுவதுடன், ஆறுகள், வடிகான்கள் முறையாக பராமரிக்கப்படுவதற்குத் தேவையான முன்மொழிவுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் முன்வைக்கவேண்டுமென இணைப்புக் குழுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

அக்கரைப்பற்றில் அரச அலுவலகங்களுக்கான இடப்பற்றாக்குறை காணப்படுவதாக திணைக்களத் தலைவர்கள் முன்வைத்த கோரிக்கை ஏற்கப்பட்டு அரச அலுவலகங்களினை மீள ஒழுங்கமைக்க குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. விவசாயக் காணிகளிலிருந்து அதியுச்சப் பயனை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்ந்ததுடன், கரும்புக் காணிகளில் கரும்புச் செய்கையுடன் மக்கள் கூடிய இலாபம் பெறுவதற்கான மாற்று விலங்கு வேளாண்மை செய்வது தொடர்பாகவும் மேற்படி கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.மேலும் இக்கூட்டத்தில் விவசாய வீதிகளைப் புனரமைத்தல், நீர்ப்பாசன மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துதல், சுத்தமான குடிநீர் வழங்குதல் போன்ற மக்களின் அத்தியாவசிய தேவைகளை விஸ்தரிப்பு செய்வது தொடர்பிலும் இதன்போது கலந்துகொண்ட திணைக்களத் தலைவர்களினால் தீர்வு எட்டப்பட்டது.

# தொழிற்சங்க நடவடிக்கை அனைத்திலும் பொதுமக்களும் இணைய வேண்டும்

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் மஹ்தி கோரிக்கை



(கிண்ணியா செய்தியாளர்)

வரி அதிகரிப்பு, நீர், மின் கட்டண அதிகரிப்பு போன்ற அரச பயங்கரவாதத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் நாட்டு மக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம். மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (14) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

திராணியற்ற நிர்வாகம், ஊழல், மோசடி போன்றவற்றால் நாட்டையும் நாட்டுமக்களையும் நாசம் செய்து பொருளாதாரத்தையும் அதலபாதாளத்தில் தள்ளிய மோசடிக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து நாட்டை மீட்பதற்குப் பதிலாக நாட்டு மக்கள் மீது வரிகளை சுமத்தி நீர், மின் கட்டணங்களோடு விலைகளையும் அதிகரித்து விளையாடுகின்றது இந்த அரசு. ஆட்சியாளர்களும், அமைச்சர்களும் செய்த குற்றங்களுக்காக நாட்டு மக்களுக்குத் தண்டனை வழங்குவதில் என்ன நியாயம் இருக்கின்றது? எனவே, இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் பாதாளத்திற்குள் தள்ளிய இந்த அராஜக அரசுக்கு எதிராக அரங்கேறும் அனைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் நாமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவ்வறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



கடற்கரைப் பகுதியில் மண்ணில் புதையுண்ட நிலையில் மர்மப்பொருள் ஒன்று செவ்வாய்க்கிழமை(14) காலை மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்களால் இனங்காணப்பட்டதையடுத்து அவர்கள் சாய்ந்தமருது பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய குறித்த இடத்திற்கு சென்ற சாய்ந்தமருது பொலிஸார், கடற்கரைப் பகுதியில் இனங்காணப்பட்ட குறித்த பொருள் மிதிவெடியா அல்லது மர்மப்பொருளா எனவும் மேலும் வேறு இடத்திலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளதா என்றும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். விசேட அதிரடிப்படையினரின் பரிசோதனையில், மிதிவெடி அல்ல எனவும் கேஸ் நிரப்பப்பட்ட மர்மப்பொருள் எனவும் அது பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (பாறுக் ஷிஹான்)

# போடியார் புலம்பல்!



***புள்ளையாண்ட TMVP கட்சி பணம் உழைக்கிற ஒரு கும்பல் எண்டத அச்சொட்டா ரணிலிட யாலுவா செங்கலடி மோகன் சொல்லிப்போட்டாரு எலுவா.? உண்மைய சொன்ன உனக்கு வாயில சீனி போடோணும்டா! மண்மாபியா கும்பல், காணிகள அபகரித்த கும்பல், கொமிசன் வாங்கி காசு உழைக்கிற கும்பல் இதையும் ஒள்ளுப்பம் உங்கட ரணில் மாத்தையாட்ட அண்டைக்கு மட்டக்களப்புல வந்த இடத்த நீ சொல்லி இருக்கலாம் எலுவா..? TMVP கட்சில முந்தி இந்த உணர்வாளர் மோகனும் இருந்ததால புள்ளயாண்ட ரகசியம் எல்லாம் நல்லா இவருக்கும் தெரிஞ்சிருக்கும்..!***

# ஹெரோயினுடன் இருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுர் நகர் மற்றும் நகர் பிரிவில் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.சதாத், பொலிஸ் பரிசோதகர் வசந்த குமார ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்த ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஒரு நபரிடமிருந்து 20 மில்லி கிராம் ஹெரோயினும் மற்றைய நபரிடமிருந்து 20 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (14) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கு மாகாண பாடசாலைகளில் ஊடக மன்றம் அமைக்க கோரிக்கை

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஊடக மன்றங்கள் அமைக்கப்பட்டு முறையாக செயல்படுத்தப்பட்டு அதன் சேவைகள் மாணவர்களை சென்றடைய ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கலைத்திட்டத்தில் விருப்பத்துக்குரிய பாடங்களில் ஒன்றாக தகவல் ஊடகக்கற்கை பாடத்தை மாணவர்கள் தேர்ந்தெடுக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கையில், குறைவான மாணவர்களே இதற்குத் தோற்றுகின்றனர். தகவல் ஊடகத்துறை விரிவாக விருத்தியடைந்து செல்வாக்கு செலுத்தும் நிலையில் மாணவர்கள் இந்தப் பாடத்தை தேர்ந்தெடுத்து சித்திபெறுவதன்மூலம் சிறந்த தொழில்வாய்ப்பை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற முடியுமெனவும் எனவே, ஊடக மன்றம் மூலமே இதற்கான ஆலோசனைகள் வழங்கப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கின்றனர்.

பல்கலைக்கழக நுழைவு கல்விக்கல்லூரிகளுக்கான தேர்வுகளுக்கு இவ்வாறான பாடங்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன. தகவல் தொழில்நுட்பத்துக்கு தோற்றும் மாணவர்கள் யாவரும் உயர்சித்தியை பெறுவதில்லை. தகவல் ஊடகக்கற்கைக்கு தோற்றுவோர் சித்திபெறுவதை ஒவ்வொரு புள்ளிவிபரமும் சுட்டிக்காட்டுகின்றது.

அண்மைக்காலங்களில் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாணவர் பாராளுமன்றச் செயற்பாடு மாகாணமட்ட பாராளுமன்றம்வரை சென்றுள்ளதை சுட்டிக்காட்டும் பெற்றோர் பாடசாலை ஊடக மன்றங்கள் அமைக்கப்படுவதோடு அதனூடாக தகவல் ஊடக கற்கை பாடத்தை மாணவர் தேர்ந்தெடுத்து பரீட்சைக்குத் தோற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்க நேரடி கள விஜயம்

(மாளிகைக்காடு, வெல்லாவெளி செய்தியாளர்கள்)

காரைதீவு பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம், வாழ்க்கைத் தரம், வருமானம், பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பான வேலைத்திட்டங்களை ஆராய்வதற்கு Cross Ethnic Community மனிதநேய தொண்டு ஸ்தாபனம் திங்கட்கிழமை (13) காரைதீவுக்கு கள விஜயம் மேற்கொண்டது.

மேற்படி மனிதநேய தொண்டு ஸ்தாபனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் சதீஸ் நேரில் வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்தார். அத்துடன், மீனவர்களின் துன்பங்கள், பிரச்சினைகள், கோரிக்கைகள் ஆகியவற்றை செவிமடுத்ததுடன், முதல் கட்டமாக பயனாளிகளை தெரிவு செய்து மாலைநேர மீன்பிடிக்கான சிறிய ரக தோணிகளை பாவனைக்கு வழங்குவது குறித்து சாதகமாக பரிசீலிக்கும் அதேவேளை, கட்டம் கட்டமாக மீனவர்களின் தேவைகளை நிறைவுசெய்து தர முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

# கிழக்கில் ரமழானை வரவேற்க முன்னாயத்தப் பணிகள் ஆரம்பம்

(நிந்தவூர் செய்தியாளர்)

புனித ரமழான் மாதத்தினை வரவேற்கும் முன்னாயத்தப் பணிகளில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஈடுபட்டு வருகின்றனர். ரமழான் தலைப்பிறையைத் தொடர்ந்து புனித நோன்பு ஆரம்பமாகவுள்ளது.

முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் முக்கிய கலந்துரையாடல்களை நடத்தி இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ரமழான் மாதம் முழுவதும் முஸ்லிம்கள் பகல், இரவு சமயக் கடமைகளில் ஈடுபடுவதற்கேற்றவாறு பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும் பள்ளிவாசல்கள் நிறப்பூச்சு பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டு வருவதுடன், கடந்த காலங்களில் எதிர்கொண்ட இடநெருக்கடிகளை கருத்திற்கொண்டு சில பிரதேச பள்ளிவாசல்களில் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நோன்பு திறப்பதற்கு வசதியாக நோன்பு கஞ்சி மற்றும் பேரீச்சம்பழங்களை இலவசமாக விநியோகிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மாநகர சபை நிதிமோசடி தொடர்பில் பொதுமக்கள் விழிப்படைய வேண்டும்

## கல்முனை மாநகர உறுப்பினர்கள் வேண்டுகோள்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் பொதுமக்கள் விழிப்படைய வேண்டும் என கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். அம்பாறை மாவட்டம், கல்முனை பகுதியில் திங்கட்கிழமை (13) நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தத்தமது கருத்துகளை தெரிவிக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கல்முனை மாநகர சபையில் நிதி மோசடி பாரியளவில் இடம்பெற்றுள்ளது. எனினும், இவ்விடயத்தில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் உறுதியளித்துள்ளார். இருந்தபோதிலும், கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள ஊழல் மற்றும் நிதி மோசடி தொடர்பாக குற்றவாளிகளை இனங்கண்டு துரித நடவடிக்கை எடுக்க நாங்கள் மாநகர ஆணையாளரிடம் கோரியுள்ளோம்.

அத்துடன், இவ்விடயம் தொடர்பாக முன்னாள் ஆளுநர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் ஏலவே நாம் அறிவித்துள்ளதுடன், நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பதை எமது மக்களுக்கு அறியத்தருகின்றோம் என்றனர்.

இவ்விசேட செய்தியாளர் சந்திப்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன், வடிவுக்கரசு சந்திரன், கதிரமலை செல்வராஜா ஆகியோர் கலந்துகொண்டு தத்தமது கருத்துகளைத் தெரிவித்திருந்தனர்.

# கடலரிப்பு சம்பந்தமான கலந்துரையாடல்

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

நிந்தவூர் அட்டைப்பள்ளம் பிரதேசத்தில் ஏற்பட்டுவரும் கடலரிப்பு சம்பந்தமாக அப்பிரதேசத்திலுள்ள தோட்ட உரிமையாளர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள், மீனவர்கள் மற்றும் பொதுமக்களுடனான கலந்துரையாடலொன்று நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் தலைமையில் ஹாப் மூன் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் உட்பட பொதுமக்கள் இப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினைப் பெற்றுத்தருமாறு தவிசாளரிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்திருந்தனர். இதன்போது அட்டைப்பள்ளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தினால் மகஜர் ஒன்றும் தவிசாளரிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரை உடனடியாக அணுகி இவ்வனர்த்தம் குறித்து தெரியப்படுத்துவதுடன் கரையோர பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளை நேரில் அழைத்து இக்கடலரிப்பிற்கான நிரந்தரத் தீர்வு நோக்கிய நகர்வுகளை தான் அவசரமாக முன்னெடுப்பதாக தவிசாளர் இதன்போது உறுதியளித்தார்.

உலக செய்திகள்

# இலங்கை கடற்படையால் 16 மீனவர்கள் சிறைபிடிப்பு

## விடுவிக்கக்கோரி பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்




இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 16 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி, பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்த கடிதத்தில், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 16 மீனவர்கள் விசைப்படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் 12ஆம் திகதி சிறைபிடிக்கப்பட்டதாகவும், தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினர் தாக்குதல் கடந்த ஒரே மாதத்தில் நடந்த மூன்றாவது சம்பவம் இது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சிறையிலுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# மகாராஷ்டிராவில் 15அடி ஆழ்துளை கிணற்றில் தவறி வீழ்ந்த சிறுவனை மீட்கும் பணி தீவிரம்



மகாராஷ்டிராவில், 15 அடி ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த ஆறு வயது சிறுவனை மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அகமத் நகர் மாவட்டத்திலுள்ள கோபர்டி கிராமத்தில் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த 6 வயது சிறுவன் அங்கிருந்த திறந்தவெளி போர்வெல் கிணற்றில் தவறி விழுந்துள்ளான்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தேசிய மீட்பு படைக் குழுவினர், ஆழ்துளைக் கிணற்றின் பக்கவாட்டில் ஜேசிபி இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டி, சிறுவனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கெமரா மூலம் சிறுவனை மீட்புக் குழுவினர் கண்காணித்து வருவதுடன் மீட்புப் பணி நடைபெறும் இடத்தில் மருத்துவர்கள் குழு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

# சிக்குவாரா இம்ரான்கான்? 16 வரை கைதுசெய்ய தடை

## பிணையில் வெளிவரமுடியாத பிடியாணை; நீதிமன்ற உத்தரவையடுத்து பொலிஸார் வலை



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு பிணையில் வெளியே வரமுடியாத பிடியாணையை இஸ்லாமாபாத்திலுள்ள மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, இம்ரான்கானை நாளை (16) வரை கைது செய்ய இஸ்லாமாபாத் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான் அரசுக்கு எதிராக பேசிய வழக்கில் இம்ரான்கானை கைது செய்ய பல நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பித்திருந்தன.

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் சார்பில் நடந்த பேரணியில் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், கூடுதல் மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிபதி ஜீபா சௌத்ரி மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் தனது கட்சிக்கு எதிரான பாரபட்சமான நடவடிக்கைக்காக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று மிரட்டல் விடுக்கும் வகையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இவ்வழக்கை விசாரித்த இஸ்லாமாபாத்திலுள்ள மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிமன்றம், இம்ரான்கானுக்கு பிணையில் வெளியே வரமுடியாத பிடியாணையை பிறப்பித்துள்ளது.

கூடுதல் மாவட்ட மற்றும் செஷன்ஸ் பெண் நீதிபதி மற்றும் மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மிரட்டல் விடுத்த வழக்கில் இம்ரான்கான் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இம்மாதம் 29ஆம் திகதிக்குள் இம்ரான்கானை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிபதி உத்தரவிட்டதையடுத்து அவரை கைது செய்ய ஹெலிகொப்டர் மூலம் இஸ்லாமாபாத் பொலிஸார் லாகூருக்கு விரைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே தோஷகானா வழக்கிலும் இம்ரான்கானுக்கு எதிராக ஜாமீனில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தோஷகானா வழக்கை விசாரித்த கூடுதல் மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிபதி ஜாபர் இக்பால், இம்ரானுக்கு எதிராக ஜாமீனில் வெளிவரமுடியாத பிடியாணை பிறப்பித்ததோடு, எதிர்வரும் 18ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# ஈரானில் 22,000 பேருக்கு பொதுமன்னிப்பு




ஈரானில், அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய 22 ஆயிரம் பேருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஈரானின் குர்திஸ்கான் மாகாணத்தில் கடந்த செப்டெம்பரில் முறையாக ஹிஜாப் அணியவில்லை என்ற குற்றச்சாட்டின்பேரில் சிறப்புப் படை பொலிஸார் மாஷா ஆமினி (வயது 22) என்ற இளம்பெண்ணை கைது செய்தனர். பொலிஸ் காவலில் இருந்தபோது பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளாகி கோமா நிலைக்கு சென்ற அவர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்துக்கு எதிராக அங்கு போராட்டம் வெடித்தது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினார்கள். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ஆங்காங்கே பொலிஸார் கைது செய்து சிறையிலடைத்தனர்.

இந்நிலையில், அந்நாட்டு நீதித்துறை தலைவர் விடுத்துள்ள அறிக்கையில், புனித ரமழான் நோன்பு ஆரம்பமாகவுள்ள நிலையில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க ஈரான் மதத் தலைவர் கொமேனி உத்தரவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவுக்குள் நுழைய முயன்ற வெனிசுலா அகதிகள் எல்லையிலேயே தடுத்து நிறுத்தம்!



மெக்சிகோ எல்லை வழியாக வலுக்கட்டாயமாக அமெரிக்காவுக்குள் நுழைய முயன்ற வெனிசுலாவை சேர்ந்த நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்தவர்கள் எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர்.

மெக்சிகோ எல்லை நகரமான Ciudad Juarez வழியாக முள்வேலிகள் மற்றும் தடுப்புகளை உடைத்துக்கொண்டு செல்ல முயன்ற அவர்களை அமெரிக்க அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

தஞ்சம்கோரி வந்த புலம்பெயர்ந்த பெண்கள் தங்களை அனுமதிக்கக்கோரி அதிகாரிகளிடம் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர்.

சில புலம்பெயர்ந்தவர்கள் பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருட்களை அதிகாரிகள் மீது வீச முயன்றதால் பெப்பர் ஸ்பிரேயை பயன்படுத்தி அவர்களை அதிகாரிகள் விரட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச குத்துச் சண்டைப் போட்டியில் ரஷ்ய வீரர்கள்



இந்திய தலைநகர் புதுடில்லியில் நடைபெறும் சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் (ஐ.பி.ஏ) மகளிர் உலக சம்பியன்ஷிப் போட்டியில், நாட்டின் கொடியின் கீழ் போட்டியிட 12 வீராங்கனைகளை ரஷ்யா அனுப்பியுள்ளது. உக்ரைனில் நடந்த போருக்கு பதிலளிக்கும் விதமாக IBA விதித்த தடைகள் காரணமாக கடந்த ஆண்டு பதிப்பில் இருந்து ரஷ்யா தடைசெய்யப்பட்ட பின்னர் ரஷ்ய தேசியக் கொடியுடன் விளையாடும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (IOC) பரிந்துரைகளுக்கு மாறாக IBA தடையை நீக்கிய பிறகு, இந்த ஆண்டு உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் ரஷ்ய தேசிய சின்னங்கள் அணிவதற்கும், கீதம் இசைப்பதற்கும் எந்தத் தடையும் இருக்காது. மார்ச் 16 முதல் மார்ச் 26 வரை போட்டிகள் நடைபெறும். அமெரிக்கா, பிரிட்டன், உக்ரைன் உள்ளிட்ட பல நாடுகள் புறக்கணிக்கும் வகையில் இந்த சர்ச்சைக்குரிய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மாஸ்கோவின் ஷெரெமெட்டியோ விமான நிலையத்தில் இருந்து கடந்த திங்கட்கிழமை புறப்பட்ட தேசிய அணியை அனுப்ப விளையாட்டு வீரர்களின் உறவினர்கள் மற்றும் ரசிகர்கள் ரஷ்ய கொடிகள் மற்றும் சுவரொட்டிகளை தாங்கி ஆதரவு தெரிவித்ததாக ரஷ்யாவின் அதிகாரபூர்வ அரசு செய்தி நிறுவனமான TASS தெரிவித்துள்ளது. 12 பேர் கொண்ட அணியில், 2019 உலக தங்கப் பதக்கம் வென்றவரும், 2018ஆம் ஆண்டு ஐரோப்பிய சம்பியனுமான எகடெரினா பல்ட்சேவா, 50 கிலோகிராம் பிரிவில் போட்டியிடுகிறார். உலக சம்பியன்ஷிப்பில் அணி "இரண்டு அல்லது மூன்று பதக்கங்களை" பெறும் என எதிர்பார்ப்பதாக ரஷ்ய குத்துச்சண்டை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் Tatyana Kiriyenko கூறினார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# விழிப்புலனற்றோர் ஒலிப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ரத்மலானை அணி சம்பியன்





(மீனோடைக்கட்டு நிருபர்)

விழிப்புலனற்றோர் சங்கத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவினை முன்னிட்டு கிழக்கு மாகாண பிரிலியண்ட் மற்றும் கொழும்பு ரத்மலானை பார்வையற்றோர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற ஒலிப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ரத்மலானை பார்வையற்றோர் கிரிக்கெட் அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

மட்டு. உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவினை முன்னிட்டு கிழக்கு மாகாண பிரிலியண்ட் மற்றும் கொழும்பு ரத்மலானை பார்வைற்றோர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் ஒலிப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஞாயிற்றுக்கிழமை(12) மட்டக்களப்பு சிவாநந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கொழும்பு அணித் தலைவர் திமுத்த பெரேரா தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டிக்கு கிழக்கு மாகாண பொதுச்சபை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபாலரெத்தினம் பிரதம விருந்தினராகவும், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் சிறப்பு விருந்தினராகவும், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். அருள்மொழி மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் முகாமையாளர் வணக்கத்துக்குரிய சுவாமி ஜு நீலமாதவானந்தர், சங்கத்தின் ஆலோசகரும் கிழக்கு மாகாண அணி பயிற்றுவிப்பாளருமான ரி.விநாயகமூர்த்தி ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற ரத்மலானை பார்வையற்றோர் கிரிக்கெட் அணிகளுக்குரிய சம்பியன் கிண்ணத்தையும், பதக்கம் மற்றும் பரிசில்களையும் இப்போட்டியின் பிரதம விருந்தினர் வழங்கி வைத்தார்.

# சம்பியன் கிண்ணம் மருதமுனை கோஸ்ரெல் வோரீயஸ் வசம்



(றியாஸ் இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஹம்ரென் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற உள்ளக அரங்கு உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் மருதமுனை கோஸ்ரெல் வோரீயஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தினை சுவீகரித்துக் கொண்டது.

அக்கரைப்பற்று உள்ளக அரங்கில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டிக்கு கல்முனை யூத் விளையாட்டுக் கழகமும், மருதமுனை கோஸ்ரெல் வோரியஸ் விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டன.

இறுதிப்போட்டியில் மருதமுனை கோஸ்ரெல் வோரீயஸ் கழகம் 5 - 2 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சுமர் புட்சேல் சம்பியன் கிண்ணத்தினை நிகழ்வின் பிரதம அதிதி அனீஸ் மோல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.சீ.அனிசிடம் பெற்றுக் கொண்டது.

# சித்தங்கேணி சிறிகணேசா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி



சித்தங்கேணி சிறிகணேசா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி அண்மையில் பாடசாலையின் மைதானத்தில் நடைபெற்றது. விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்துவரப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து அணிநடை, மாணவர்களின் போட்டிகள், இடைவேளை நிகழ்வு, பழைய மாணவர் நிகழ்வு, பரிசில்கள் வழங்கல் போன்றன இடம்பெற்றிருந்தன.

பாடசாலையின் அதிபர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மதியழகன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் விஜயநாதன், கௌரவ விருந்தினராக ஆன்மீக அறக்கட்டளையின் செயற்பாட்டாளர் ஜனார்த்தனன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பலாங்கொடை ப்ரீமியர் லீக் மென்பந்து கிரிக்கெட் போட்டி சனியன்று ஆரம்பம்

(ஏ.ஏ.எம். பாயிஸ்)

இனங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பலாங்கொடையில் ப்ரிமியர் லீக் மென்பந்து கிரிக்கெட் போட்டி தொடரொன்று எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் பலாங்கொடை பொது விளையாட்டு திடலில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த பிரபலமான 120 வீரர்கள் பிரதான 8 அணிகளாகப் பிரிந்து 8 முகாமையாளர்களின் கீழ் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இப்போட்டித் தொடருக்கு அரச மற்றும் தனியார் துறைகளின் வர்த்தக நிறுவனங்களும் வர்த்தகர்களும் தமது பூரண ஒத்துழைப்பையும் அனுசரணையையும் வழங்கி வருவதாகவும் வெற்றிப் பெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட உள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7